கமலம்-2 1—12—20. இதழ்-11, 12.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

இஸ்லாமும் இதர மதங்களும்

மதத்தின் நோக்கம் யாது?

நாம் இப்பொழுது ஆராய்ச்சி செய்ய எடுத்துக்கொண்ட விஷயம் இஸ்லாமும் இதரமதங்களும் என்பதாகும். எமது இஸ்லாமார்க்கத்தை ஏனைமதங்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்ச்சிசெய்ய முயலுமுன், "மதத்தின் நோக்கம் யாது?" என்பதைச் செவ்வனே தெரிந்து கொள்ள வேண்டும். மதத்தின் நோக்கம் என்ன என்பதைப்பற்றி முடிவு செய்வதில் பலர் பலவாறு அபிப்பிராய பேதம் கொள்கின்றனர். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ளவர் தத்தமக்குத் தோன்றியவாறு பலபல மதங்களையும் தத்துவங்களையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மதத்தினரும் தத்தம்முடைய மார்க்கமே சன்மார்க்கமென்றும் அதுதான் தெய்வத்தால் அங்கீகரிக்கப்பட்டதென்றும் வாதிக்கின்றனர். ஆயினும் தாம் சொல்லும் மார்க்கக்கொள்கை எம் மட்டும் மனிதனுக்குப் பயனைத்தந்து மேன்மையைக் கொடுக்கக்கூடுமென்று அவர்கள் சற்றும் நிதானிப்பதில்லை. அவ்வளவு தூரம் புத்திக்குப் பொருத்தமில்லாமற்போயினும் எவ்வளவு அதிகம் இடுப்பொடிக்கும் படியான சித்தாந்தமாயிருப்பினும் தாம் செப்புவதே சரியென்று அவர்கள் வாதம் செய்து பிடிவா

தம் பண்ணுகின்றனர். "நாம் இவ்வுலகத்தையே துறந்து விட்டுச் சுத்தசன்னியாசக் கோலத்துடன் தெய்விக வழியில் செல்வதுதான் மதத்தின் நோக்கம்," என்கின்றனர் சிலர். "நாம் இவ்வுலகத்திலுள்ள மனிதர்களின் குணாதிசயங்களைச் செம்மைப்படுத்துவதுதான் சன்மார்க்கத்தின் நோக்கம்," என்று சொல்கின்றனர். இன்னும் சிலர் "நாம் பிறக்கு முன்னே நம்முடன் பாபம் தொடர்ந்து வந்திருப்பதால் கர்த்தருடைய நித்தியமான தண்டனைக்கு ஆளாகாமல் அவருடைய கோபத்தைச் சாந்திசெய்யும் பொருட்டு நம்முடைய பாபங்களை யெல்லாம் ஏற்றுக்கொண்டு ஒருவர் சிலுவையில் அறைபட்டு இறந்துபோனார்; அப்படி அவர் இறந்தாரென்று நம்புவோமாயின் நம்மீது கர்த்தருக்கு மனமிரங்கி நம்முடைய பிறவிப்பாபமுழுதும் மன்னிக்கப்படும்," என்கின்றனர் வேறுசிலர். நாம் பிறப்பதற்குப் பன்னெடுங்கால முன்னரே நம்மைப் பாபம் வந்து சூழ்ந்துகொண்டதென்கின்றனர் அம்மதத்தினர், "நம்முடைய முன்ஜன்மங்களின் கர்மபாசத்தால் இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம்; நம்முடைய கர்மத்தையொழித்துப் பிறப்பையறுத்துப் பேரின்பமோக்ஷம் பெறுவதே உத்தம மார்க்கத்தின் நித்தியக்கொள்கை," என்று வாதம் செய்கின்றனர் மற்றுமொரு சாரார். உண்மையான மதத்தின் உத்தம நோக்கம் யாது என்பதைப் பற்றி வெவ்வேறு மதத்தினர் வெவ்வேறு வகையாய் அபிப்பிராயம் கொடுக்கும்போது எமது இஸ்லாமார்க்கத்தின் இணையில்லாத் திருமறையாகிய சுத்தசத்திய சம்பூரணவேதமாகிய குர்ஆனேகரீம் என்னும் புர்க்கானே மஜீதானது மதத்தின் நோக்கம் இன்னதென்பதைப்பற்றி ஒரே பதத்தில் முடிவு கட்டி விட்டது. ஆண்டவனிடத

திலிருந்து மனிதனுக்கு அனுப்பப்பட்டிருக்கும் உண்மை யான சன்மார்க்கத்தின் லக்ஷியம் பலாஹ் என்பது தான் என்று எமது திருமறை சித்தாந்தம் செய்திருக்கிறது. "தங்களுடைய இறைவனிடத்திலிருந்து வந்திருக்கும் நே ரான பாதையில் இவர்கள் செல்கிறார்கள்; இவர்கள் தான் முபுலிஹூன் ஆவார்கள்"—(அல்குர்ஆன்,2:5). (பலாஹை அடைபவர்கள் முபுலிஹூன்.) பலாஹ் என்பதன் சரி யான தாத்பரியத்தை வியாக்கியானம் செய்வதற்கு வேறு பாஷையில் தகுந்தசொல் கிடையாதாகையால் மூலத்தி லுள்ள அரபு வார்த்தையையே இங்கே குறிப்பிட்டுள் ளோம். பலாஹ் என்பதன் தாத்பரியத்தை "விசேஷ ஜயம்" என்று ஒருவாறு சாதாரணமாய்க் குறிப்பிடலாம். பலாஹ் என்பதன் மூலார்த்தத்தை நோக்கும் போது "பூமிக்குள் மறைந்து கிடப்பதை உழுது வெளிப்படு தல்" என்பது அதன் வியாக்கியானமாகிறது. பூமிக்குள் மறைந்து கிடக்கும் சக்தியை உழுது வெளிப்படுத்தினால் விசேஷஜயம் கிடைப்பதேபோல் மனிதனிடத்தில் மறை ந்து கிடக்கும் அபரிமிதமான அந்தரங்க சக்தியை முயற் ச்சி செய்து வெளிப்படுத்தினால் அபாரஜயம் உண்டாகு மென்பதை பலாஹ் என்னும் பதம் தெரிவிக்கின்றது. இஸ்லாத்தின் தத்துவப்படி மனிதனாலாகாத காரியம் ஒன் றுமே யில்லை; 'இது என்னாலாகாது,' 'அது உன்னா லாகாது' என்று சொல்வது எமது இஸ்லாத்துக்கு ஒத்த தன்று. மனிதனிடத்தில் அமைந்து கிடக்கும் அபரிமித மான அந்தரங்க சக்தியை முயற்சித்து வெளிக்கிளப்ப மாட்டாதவரே "கையாலாகாது" என்று சாக்குச் சொல் வார். எவ்வளவுக்கெவ்வளவு நம்முடைய அந்தரங்க சக் தியை யெல்லாம் வெளிப்படுத்து கிறோமோ அவ்வளவுக்

கவ்வுளவு அபாஜயமுண்டாகும்; சக்தியை வெளிக்கிளப்ப எவ்வளவுக் கெவ்வளவு அசட்டை செய்கிறோமோ அவ் வளவுக்கவ்வளவு ஜயமும் குறையும். முழுச்சக்தியையும் எவனொருவன் வெளிப்படுத்துகிறானோ அவனே முழு வெற்றியும் அடைகிறான். இவ்வாறே ஒவ்வொரு மனி தனும் தன் தன்னுடைய முழுச்சக்தியையும் முன்னுக்குக் கொண்டுவந்து முதன்மையான வெற்றியை யெல்லாம் அடைய வேண்டுமென்பது தான் எமது இஸ்லாத்தின் கொள்கை. இதுதான் பலாஹ் என்னப்படுவது. இது தான் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட எமது இஸ்லா மிய சன்மார்க்கத்தின் நோக்கம் (அல்குர் ஆன், 2:31—33). மனிதனிடத்தில் மறைந்து கிடக்கும் நன்மை யெல்லாம் மேன்மை பெற வேண்டும்; அவனிடத்தில் அந்தரங்கமாய் அமைந்து கிடக்கும் அதிசயங்களெல்லாம் பகிரங்கமாய் வெளியாதல் வேண்டும். கர்த்தருக்குத் திருப்தி செய்வதே மதத்தின் லக்ஷியம் என்று சிலர் சொல்கின்றனரே, அஃ துண்மையாயின், அக்கர்த்தருக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? கடவுள் நம்மை ஒரு நல் நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கும் போது அந்நோக்கத்தை நாம் பூர்த்தி செய்து வைக்காமல் போடுபோக்கா யிருந்துவிடுவோ மாயின் நாம் அக்கடவுளுடைய கோபத்துக்குப் பாத்திர மாக மாட்டோமா? ஆண்டவனுக்குச் சிறப்புச் செய்வ தென்றால் தெய்வத்தின் அடியாளென்ற ஒருத்தியை ஆடச்செய்வதாலும் மேளதாள ஹார்மோனிய வாத்தியங் களால் பாடச் செய்வதாலும் உத்சவம் முதலிய வீண்டம் பங்கள் செய்வதாலும் ஒன்றும் பயனில்லை. இப்படிச்செய் வதெல்லாம் வீண்ஸ்தோத்திரம் என்பது சாமான்யர்களுக் கும் தெரியும். வாய் ஸ்தோத்திரத்தில் சாதாரண மனிதர்

களுக்கே வெறுப்புண்டாகும் போது கடவுளுடைய நிலைமை என்னவாயிருக்குமென்று எண்ணிப்பார்க்க வேண்டாமா? "பலாஹ்" என்னும் பதத்தில் சொல்லப் படுவதுபோல் மனிதன் தன்னிடத்திலுள்ள அபரிமித மான அந்தரங்க சக்தியை யெல்லாம் பகிரங்கப்படுத்தி அபாரஜய்ம் பெறவேண்டு மென்பது தேவநோக்கமா யிருக்கும்போது அந்நோக்கத்தைப் பூர்த்திசெய்துவைப் பதே உண்மையான தேவஸ்தோத்திரமாகும்; மனிதனை என்ன நோக்கத்துடன் இறைவன் படைத்திருக்கிறானோ அந்நோக்கத்தைப் பூர்த்திசெய்து வைப்பதுதான் அக் கடவுளுக்குத் திருப்தி செய்வதாயின் நம்மையே நாம் மேன்மைப்படுத்திக்கொண்டு நம்முடைய அந்தரங்க சக்தி களையெல்லாம் வெளிப்படுத்தவேண்டியது அத்தியாவசிய மாகும்; இதில்தான் நம்முடைய விமோசனத்துக்குரிய ஜயமெல்லாம் பொதிந்திருக்கிறது. இதுதான் மனிதன் இவ்வுலகில் தோன்றியதன் பயனாக அடையத் தக்க லக்ஷியமாகும். "எவனொருவன் தன்னையே தான் பரிசுத்த மாக்கிக்கொண்டு அப்பரிசுத்தத்தின் மூலமாய் தன் னுடைய முழுச்சக்தியின் சம்பூரணத்தையும் அடை கிறானோ அவனே ஜயமுள்ளவனாவான்; ஆனால் தன் னுடைய சக்திகளையெல்லாம் வெளிப்படுத்தாமல் தடைப் படுத்தி மழுங்கச் செய்தவன் அபஜயத்தை யடைகிறான்," என்று எமது குர்ஆன் ஷரீபு ஓரிடத்தில் விளக்கி யிருக் கின்றது. இன்னும் அவ்வேதபுத்தகம் மனிதனுடைய மதத் தைப்பற்றி லக்ஷணம் சொல்லும்போது பின்வருமாறு கூறுகின்றது. "நேரான வழியில் ஸ்திரமாக உங்களுடைய முகத்தைத் திருப்புங்கள்; அதுதான் இறைவனால் அருளப் பட்ட இயற்கையாகும்; அதன்மீதுதான் ஆண்டவன் மனி

தனைப் படைத்திருக்கிறான்; ஆண்டவனுடைய படைப்பில் ஒன்றும் மாறுதல் இருக்க முடியாது; அதுதான் மதமென்பது." இவ்வாறு ஆண்டவன் மனிதனுடைய மார்க்கத்தைப்பற்றி லக்ஷணம் வகுத்திருக்கிறான்; ஆண்டவன் என்னைப் படைத்திருக்கும் இயற்கைதான் என்னுடைய மார்க்கமாகும்; அவ்வியற்கையின்படி என் அபார சக்திகளை யெல்லாம் வெளிப்படுத்துவதுதான் என்னுடைய ஆண்டவனுக்குத் திருப்தியைத்தரும்; அப்பொழுதுதான் ஆண்டவனது நேரான மார்க்கத்தில் நான் சீராக நடந்தவனென்று கருதப்படுவேன். உங்களுடைய இயற்கை இன்னதென்பதை உற்றுணர்ந்து அதில் எவ்வளவு அபரிமிதமான அந்தரங்க சக்திகளெல்லாம் காணப்படுகின்றனவென்று கண்டுகொண்டு அச்சக்திகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரத்தக்க வழிகளைக் கண்டுபிடித்து விடுவீர்களேல் அதுதான் உங்களுடைய "பலாஹ்"; அதுதான் உங்களுடைய மார்க்கமாகும்; அதுதான் தெய்வத்துக்கும் சம்மதமாகும். எம்முடைய திருமறையின் சித்தாந்தப்படி ஆண்டவனுடைய அருள்வாக்கு (வஹீயும் இல்ஹாமும்) மனிதனுக்கு உண்டாவதன் நோக்கம் நம்முடைய சக்திகள் இப்படிப் பட்டவையென்றும் அவற்றை வெளிப்படுத்தி விசேஷஜயம் பெறும் மார்க்கம் இதுதானென்றும் காட்டவேண்டுமென்பது தான். உங்களுடைய இயற்கையை நீங்கள் நன்குணர்வீர்களேல் அதுதான் உங்களுடைய மார்க்கம்; அதுதான் எங்களுடைய மார்க்கம்; அதுதான் ஆண்டவனுடைய மதமாகும். "தன்னை யுணர்ந்தவன் தன் தலைவனை யுணர்வான்," என்று நமது திருநபியவர்கள் வெகு அழகாக மனிதனுடைய மார்க்கம் இப்படிப்பட்ட தென்பதைப் பற்றிச் சிறப்பித்துக் கூறியிருக்

கிறார்கள். உங்களிடத்தில் அமைந்துகிடக்கும் ஆபார சக்தி இப்படிப்பட்டதென்பதை நன்குணர்ந்து கொள்ளுங்கள்; அதன்பின் அச்சக்திகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து அபரிமிதமான ஜயத்தையெல்லாம் அடையுங்கள்; அதுதான் பலாஹ்; அதுதான் ஆண்டவனுடைய சன்மார்க்கம்; அதுதான் இஸ்லாம்.

சுவர்க்கமும் நரகமும்

"பலாஹின் சித்தாந்த"மே பாமனுக்கு உவந்ததென்று நாம் சொல்லும்போது அதன் சம்பந்தமாகச் சுவர்க்கம் இன்னதென்றும் நரகம் இன்னதென்றும் உணர்ந்துகொள்ளுவதற்கு ஓர் உணர்ச்சியுண்டாகிறது. அவ்வுணர்ச்சியைத் திருப்தி செய்யும் பொருட்டு இஸ்லாமிய கொள்கைப்படி சுவர்க்கம் இன்னதென்றும் நரகம் இன்னதென்றும் இங்கே சிறிது குறிப்பிடவேண்டியது அவசியமாய்க் காணப்படுகிறது. எல்லா மதத்தினரும் தம்தம்முடைய மதத்தின் நோக்கம் நரகத்தை ஒதுக்கி மனிதன் சுவர்க்கத்தில் புகுதவேண்டியது தான் என்று நம்புகின்றனர்; இது ஒரு விதத்தில் வாஸ்தவம்தான். ஒவ்வொருவரும் தம் தம்முடைய மார்க்கத்தில் சொல்லியபடி நரக வேதனையை அப்புறப்படுத்திச் சுவர்க்கானந்தத்தையடையவே ஆவல் கொள்ளுகின்றனர். சுவர்க்க நரகங்களின் சம்பந்தமாக எமது சுத்த சத்தியவேதமாகிய அல்புர்க்கான் என்னசொல்கிறதென்று ஈண்டு கவனிப்போம். எமது குர்ஆன் ஷரீபில் சுவர்க்கம் என்று சொல்லவேண்டிய இடங்களில் ஜன்னத் என்னும் அரபு வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்பட்டிருக்கிறது. குர்ஆன் ஷரீபின் சித்தாந்தப்படி சுவர்க்கானந்தத்தின் உண்மைச்சொரூபத்தை

ஜன்னத் என்னும் பதம் மிகத்தெளிவாய் விளக்கிக் காட்டு கின்றது. ஜன்னத் என்பதற்கு "மறைக்கப்பட்டிருக்கும் வஸ்து" என்பது ஒரு பொருள்; இது நம்முடைய சாதாரண ஊனக்கண்ணுக்குப் புலப்படமாட்டாது; ஜன்னத் என்பதன் மற்றொரு பொருள் "மிகவளப்பம் பொருந்திய அடர்த்தியான உத்தியானவனம்" என்பதாகும். சாருபடிக்காக நாம் உழுதுவைத்திருக்கும் சேற்றங்காலைக் கவனிப்போம். அது சாதாரணமாய்க் கருப்பாகவும் கண்ணுக்கு அருவருப்பாகவும் காணப்படுகிறது; அதில் ஒன்றும் பார்ப்பதற்குப்பஸந்தில்லை. ஆனால் அச்சேற்றில் அமைந்துகிடக்கும் அந்தரங்கசக்தியைக் கவனிக்கும் பக்ஷத்தில் நமக்கு ஆச்சரியமான ஓர் உணர்ச்சி யுண்டாகிறது. அச்சேற்றைச் செப்பனிட்டுத் தழைபோட்டு எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சித் தோட்டக்கால் பயிர் செய்ய ஆரம்பிப்போமாயின் சிறிது காலத்துக்குள் அந்தக்கருத்த அருவருப்பான சேறு ஓர் அழகிய ஆனந்தபாவசமுள்ள உத்தியான வனமாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட அதிசயத்தை நாம் தினந்தினம் காண்கிறோம். நாம் இவ்வுலகில் ஊனக்கண்ணால் பார்க்கும் ஒவ்வொன்றிலும் அந்தரங்க சக்தியின் அதிசயம் அதிக ஆழமாகக் குடிகொண்டேயிருக்கிறது; அச்சக்தியை வெளிப்படுத்தும் பக்ஷத்தில் அதிலுள்ள அதிசயமெல்லாம் வெளியாகின்றது. அந்த அதிசயம் வெளியாகுமுன் சாதாரண அருவருப்புள்ளதாக அது காணப்படுகிறது; அப்பொழுது அது நாகவேதனை போல் காணப்படுகிறது. நாகவேதனை போன்ற அந்த அருவருப்பை நீக்கி அதில் மறைந்துகிடக்கும் அதிசய ஆனந்தத்தை வெளிப்படுத்துவோமாயின் அது சுவர்க்கானந்தமாக மாறுகின்றது. இப்படியே ஒவ்வொரு வஸ்துவுக்கும் நாக

நிலைமையும் சுவர்க்கநிலைமையும் உண்டு. இஃதேபோல், மனிதனுக்கும் இவ்வுலகில் நரகவேதனையும் சுவர்க்கானந்தமும் உண்டு. மனிதனுடைய அபரிமிதமான அந்தரங்கசக்தியையெல்லாம் வெளிப்படுத்தி அதிவிசேஷஜயத்தை அவன் அடைவானாயின் அதுவே அவனுக்கு இவ்வுலகில் சுவர்க்கானந்தமாகிறது. இவ்வாறில்லாமல் ஒருவன் தன்னுடைய சக்திகளையெல்லாம் வெளிப்படுத்தாமல் சோம்பேறியாய்த்திரிந்து அபஜயம் அடைவானாயின் அவனுக்கு அது தான் இகலோக நரகவேதனையாய்க் காணப்படுகிறது. அண்டத்துக்குள்ளதுதான் பிண்டத்துக்கும். மனிதனுடைய பிண்டமானது ஒரு சிறிய அண்டமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பெரிய அண்டமானது எவ்வளவோ அருமையான அபரிமிதமான சக்திகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது; இவ்வாறே மனிததேகமும் மிக அருமையான அழகிய ஒருசிறு அண்டமாக அமைக்கப்பட் டிருக்கிறது. இப்பிண்டத்தில் அபாரமான சக்திகளெல்லாம் அமைந்து கிடக்கின்றன; அவற்றையெல்லாம் வெளிக்கிளப்புவோமாயின் அதிசிலாக்கியமான அளவற்ற வெற்றிகள் காணப்படும். மனிதர்கள் எவ்வளவு தூரம் தம்முடைய அந்தரங்கசக்தியால் அதிகஜயம் அடைந்தபோதிலும் அதற்கப்பால் ஆண்டவன் கொடுத்த சக்தி அபரிமிதமாக மிகுதியிருந்து கொண்டே யிருக்கும்; அதாவது, நாம் இவ்வுலகிலும் இதற்கப்பால் வரப்போகிற அவ்வுலகிலும் எவ்வளவு உன்னத நிலைமைக்கு ஏறிய போதிலும் அதற்கு மேலும் நாம் எய்தக் கூடிய அதி உன்னத நிலைமை பாக்கியிருந்து கொண்டேயிருக்கும். "எப்பொழுதும் அற்றுப் போகாத அப்படிப்பட்ட சன்மானத்தை அவர்கள் அடைவார்

கள்"—(அல்குர் ஆன், 95:6 இன்னும் 84:25-ம் பார்க்க) ஆகவே மனிதன் தன்னாலியன்ற மட்டும் தன் சக்திகளை யெல்லாம் வெளிப்படுத்தி விசேஷ ஜயம் பெறுவானாயின் அவனுக்கு இவ்வுலகிலேயே சுவர்க்கானந்தம் ஜனிக்கின்றது. இவ்வாறில்லாமல் அவன் தன்னுடைய அந்தரங்க சக்திகளையெல்லாம் செவ்வனே வெளிப்படுத்தாமல் சோம்பித்திரிவானாயின் அவனுக்குத் தன்னுடைய மனத்தின் கண் உதயமாகும் ஆண்டவனது புழுக்கமே இகலோக நரகவேதனையாய் முடிகிறது (அல்குர்ஆன்). உம்மைப்போலவே சமமான இடம் பொருள் ஏவல் களையுடைய வேறொருவர் உம்மோடு கூடவே ஒரே காலத்தில் தம்முடைய உயிர் வாழ்க்கையை ஆரம்பித்து, உம்முடைய சக்திகளை நீர் செவ்வனே செலவு செய்யாமல் அபஜயமடைந்து அவமானத்துக் குள்ளாயிருக்கும்போது, அவர் மட்டும் தம்முடைய அந்தரங்க சக்திகளையெல்லாம் சரியான வழியில் செலவழித்து அபாரஜயம் பெற்று நிற்பதை நீர் காணுந்தோறும் உம்முடைய மனத்தில் ஒருவகைப்புழுக்கமும் எரிச்சலும் உண்டாவதில்லையா? குர்ஆன் ஷரீபில் குறிப்பிடப்பட்டிருக்கும் நரகவேதனையின் பலவகை அம்சங்களுள் ஏகதேசத்தை நாம் மேலேகூறிய மனப்புழுக்கமும் எரிச்சலும் ஒருவாறு குறிக்கும். எரிகின்ற அக்கினிக் குழம்பு கொதித்துக்கொண்டிருக்கும் பெரிய ஏரிபோன்ற விசாலமான நரகம் ஒன்றுண்டென்றும் அதில் மனிதர்கள் கிடந்து துள்ளித் துள்ளிக் கதறுவார்களென்றும் சொல்லிக்கொள்பவர் சொல்லட்டும்; அவர்கள் அப்படிப்பட்ட நரகில் வீழ்ந்து வெந்துகொண்டே கிடக்கட்டும்; இன்னும் சிரசில் தங்கக்கிரீடம் சூடிக்கொண்டு மேகசஞ்சாரம் செய்து கடவுளை அல்லும் பக

லும் அனவரதமும் துதித்துக்கொண்டு இருப்பதுதான் சுவர்க்கபோகமென்று சொல்லிக்கொள்பவர் அப்படிப் பட்ட சுவர்க்கானந்தத்தை அடைந்து திருப்தியடையட் டும். ஆனால் எமக்கு அப்படிப்பட்ட ஒரே மந்தமான சுவர்க்கபோகம் வேண்டாம்; ஒரேவித ஆனந்தத்தால் எமக்குச் சலிப்பு உண்டாகும்; திகட்டும்படியான ஒரே வித போகம் எமக்கு ஒருபோதும் தேவையில்லை. ஒரு படித்தரத்திலிருந்து மற்றொரு படித்தரத்துக்கு மேன்மே லும் விருத்தியடைந்துகொண்டே போகக்கூடிய ஷௌகு தரத்தக்க சுவர்க்கமே இஸ்லாமிய சுவர்க்கமாகும்; அது தான் எமக்கு ஷௌகைத் தரத்தக்கது (அல்குர் ஆன், 66:8.) நம்முடைய கண்ணில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவும் தன்தன்னுடைய ஸ்திரமான ஒரே நிலைமையில் நில்லாமல் மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டு முன் னேறிச்செல்வதை நாம் ஒவ்வொரு நாளும் கண்கூடாகப் பார்க்கிறோம். நாம் இவ்வுலகில் பார்க்கும் வஸ்துக்கள் அடிக்கடி நசித்துப்போவதைக் கண்ணால் காண்கிறோம். நசித்துப்போவதென்றால் நாஸ்தியாய்ப் போவதென்று தப்பருத்தம் செய்துகொள்ளவேண்டாம். உலகில் ஒன் றும் நாஸ்தியாய்ப் போவது கிடையாது. நசித்துப்போ வதென்றால் ஒன்று மற்றொன்றாக மாறுவது என்பதே பொருளாகும்; ஒரு நிலைமைமாறி மற்றொரு நிலைமை வரு வதானால் இரண்டுக்கும் இடையில் நசிப்பு உண்டாகிறது; ஒரு நிலைமை நசித்து வேறொரு நிலைமை உதயமாகின்றது. இறைவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகளுக்குள்ளெல்லாம் மனிதன் மகா சிலாக்கியமானவன். மற்ற வஸ்துக்களுக் கெல்லாம் நசிப்பு உண்டாகி நிலைமை மாறும்போது மனி தனுக்கும் அப்படிப்பட்ட நிலைமை மாறுதல் அவசியம்

உண்டாகியே தீரவேண்டும். ஆதலின் சாதாரணமாய் 70,80,90, 100 பிராயத்துக்குமேல் மனிதன் நசிப்பை யடையாமல் இவ்வுலகில் தாமதித்து இருப்பது முடியாது. ஆனால் இந்தக் குறுகிய காலமாகிய 70,80,90,100 வருஷங்களுக்குள் மனிதன் தன்னுடைய அந்தரங்க சக்திகளை யெல்லாம் வெளிப்படுத்துவது அசாத்தியமாகும். ஆதலின் நாம் மரணமடையும்போது நம்முடைய சக்திகளின் பெரும்பாகம் வெளிப்படாமலேயிருந்து விடுகின்றன. சில மனிதர்களிடத்தில் மட்டும் இச்சக்தி கொஞ்சம் வெளியாகின்றது. ஆனால் பல்லாயிரக்கணக்கான மாந்தரிடத்தில் அச் சக்தியானது சிறிதும் வெளியில் தலைகாட்டாமலே யிருந்துவிடுகிறது. அவர்களுடைய சக்தி எல்லாம் என்ன வாகிறது? மனிதனுக்கு அபரிமிதமான சக்திகளையெல்லாம் அமைத்துவிட்டு அவனுக்கு 100 வருஷத்துக்குமேல் இகலோக வாழ்க்கை யில்லையென்றால் அவன் எவ்வாறு தன் முழுச்சக்திகளையும் பயன்படும்படி செய்வது? எமது இஸ்லாமார்க்க சித்தாந்தப்படி மனிதனுடைய சக்தியானது அவனுடைய மரணத்துடன் நாஸ்தியாய்ப் போவதில்லை. மரணத்துக்குப்பின்னும் அச்சக்தியானது தன்தொழிலைச் செய்து கொண்டே போகிறது; இகலோகத்தில் என்னுடைய சக்தியை ஒழுங்கு படுத்தி அதன் முறைப்படி தொழில்செய்து வெற்றியடைவேனாயின் என் மரணமானது அச்சக்தியை நாஸ்திசெய்து விடாது. மேன் மேலும் "பலாஹின்" பலனை அடைந்து கொண்டே போகும் (அல்குர்ஆன், 95:6). அதுதான் நமது இஸ்லாமார்க்கத்தில் ஜன்னத் என்னப்படுவது. இக்காரணத்தால் தான் மரணமானது இகத்தையும் பரத்தையும் பிரிப்பதில்லை, ஆனால் அதுதான் அவ்விரண்டையும் ஒன்று சேர்க்

கிறது என்று எமது திருமறை புகல்கின்றது. மரணமானது என்னுடைய நிலைமையை மட்டும் மாற்றுகிறதல்லாமல் என்னுடைய ஆத்மசக்தியை அது ஒன்றும் செய்வதில்லை.

அடுத்த வாழ்க்கைக்காக ஆயத்தம் செய்தல்

நமக்கு வேண்டிய சுவர்க்க நரகங்களை நாமே உண்டு பண்ணிக்கொள்கிறோம். நம்முடைய வெற்றிக்கு வேண்டிய சக்தியெல்லாம் நமதுமனத்திலேயே பதிந்து கிடக்கின்றது. நிலத்தை உழுது பண்படுத்தி அதில் விதையைத் தெளித்தபின் வானத்திலிருந்து சிறிதுமழையும்பெய்துவிடின் நமக்கு வேண்டியதற்குமேல் அளவிடற்கரிய விளைவையெல்லாம் அடைகிறோம். இவ்வுலகம் தோன்றியகாலமுதல் இன்றளவும் எவ்வளவோ விளைபொருளை இப்பூமியானது கொடுத்திருந்தும் பூசாரம இன்றோடு முடிவடைந்து விட்டதென்று சொல்வதற்கில்லை. இன்னும் இவ்வுலகம் முடியுமட்டும் பூமியானது தன் சாரத்தின் மகிமையால் எண்ணிறந்த விளைபொருள்களை அளித்துக்கொண்டேயிருக்கும். இஃதேபோல் மனிதனுடையமனமும் அருமையாக அமைக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு அபாரமான சக்தியை நாம் வெளிப்படுத்திய போதிலும் மனமானது வெறுமையாய் வறண்டுபோவதில்லை. பூசாரத்தில் காணப்படும் அபரிமிதமானசக்திபோல் மனிதனிடத்திலும் காணப்படுகிறது. "நிச்சயமாக நாம் இப்பூமியின் சாரத்திலிருந்து மனிதனைப் படைத்திருக்கிறோம்" (குர்ஆன்). 'பூமியில் காணப்படும் சகலவஸ்துக்களின் சாரமும் பலதுறைகளின் வழியே பரிசுத்தமாக்கப்பட்டுக் கடைசியில் மகா உன்னதமயமான மனித உருவை அடைகின்றது; இதனால் தான் மனிதனி

டத்தில் பூசாரத்தைப்போன்ற அபரிமிதமான உன்னத சக்தியெல்லாம் காணப்படுகின்றன. உலகம் தோன்றியது முதல் இன்றளவும் பூசாரமானது வறண்டு போகாமலிருப்பதே போல் மனிதசக்தியும் ஒரு போதும் முடிவடைந்து போவதில்லை; பஞ்சேந்திரியங்களுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கத்தக்க அபூர்வமான வஸ்துக்களையெல்லாம் இவ்வுலகம் உற்பத்திசெய்வதேபோல் ஆத்மாவுக்கு ஆனந்தத்தை விளைக்கத்தக்க எல்லாஉன்னத நிலைமைகளையும் மனிதனுடைய மனமானது உற்பத்தி செய்கின்றது. தன்னுள் பொதிந்து கிடக்கும் அபாரசக்தியை யெல்லாம் வெளிப்படுத்துவதற்கு இப்பூமிக்கு மழைவேண்டும்; இஃதேபோல் மனிதனுடைய ஆத்ம சக்தியையும் வெளிப்படுத்த ஆகாயத்திலிருந்து ஆனந்தமழை பொழிதல் வேண்டும். பூமியிலுள்ள வஸ்துக்களெல்லாம் கட்புலனாகும் பொருளானதால் கார்மேகத்தினின்றும் கட்புலனாகக்கூடிய மழைபெய்கின்றது; ஆனால் மனிதனுடைய மனத்தில் ஆத்மார்த்தமான அந்தரங்கவஸ்துக்கள் நிறைந்திருப்பதால் அவற்றிற்கு வேண்டிய மழையானது கட்புலனாகக்கூடிய கார்மேகத்தினின்றும் பெய்தல் முடியாது. இடத்திற்குத்தக்க மழை இறங்க வேண்டும். பூசாரத்துக்குக் கார்மேகத்தினின்றும் மழைபெய்கின்றது. ஆனால் ஆத்மசாரத்துக்கு அம்மழை உதவாது. உயிர்ப்பிராணிகளிடத்தில் முதன் முதல் காணப் படுவது தான் என்னும் அறிவுதான். இவ்வறிவானது மனிதனிடத்தில் தோன்றும் போது பல்வகைப் பரிசுத்தத்தை அடையவேண்டி யிருக்கிறது; மிருகத்தினிடத்தில் காணப்படும் நான் என்னும் குணமானது "எல்லாம் என்னுடையது" என்னும் அபிலாசையை உண்டுபண்ணுகிறது; "எல்லாம் என்னுடையது"

என்னும் மிருகத்தின் தன்மையைக்கடந்து, "என்னுடையது எனக்குச் சொந்தம்," "உன்னுடையது உனக்குச் சொந்தம்" என்னும் சன்மார்க்க நிலைமையையடைந்து அப்பால் "என்னுடையது ஒன்றுமில்லை, எல்லாம் உன்னுடையதே" என்னும் ஆத்மார்த்த நிலையை நம்முள் ஒவ்வொருவரும் அடைய வேண்டுமாயின் நம்முடைய மனத்திற்குவேண்டிய தெய்விகமழை ஆத்மார்த்தமாய் வருஷித்தல் வேண்டும்; கேவலமான மிருகத் தன்மையிலிருந்து அபாரமான மானுஷீகத்தன்மையை யடைய வேண்டுமாயின் அதற்குச் சாதாரணமழையால் ஒன்றும் பயனில்லை; மனிதர்களுக்கு வேண்டிய ஆத்மார்த்தமான ஞானமழையானது 1300 வருஷங்களுக்குமுன் அதிகமாகப்பெய்தது; அம்மழையானது இவ்வுலகம் முடியுமட்டும் போதுமானதாய்ப் பெய்து விட்டது. அது தேவ சன்னிதானத்திலிருந்து திருமறையாய்ப்பொழிந்தது. "மழையைப்பொழிகின்ற மேகத்தைக் கவனியுங்கள். அதன்பின் (விளைபொருள்களால்) இப்பூமி வாய்திறப்பதையும் பாருங்கள். மகா நிச்சயமாக இது (குர்ஆன்ஷரீபு) ஆண்டவனுடைய முடிவான வார்த்தையாயிருக்கிறது." (அல் குர்ஆன், 86.11-13). மனிதனுடைய புத்தியும் சித்தமும் அவ்வேதத்தைப் பின்பற்றும்படி கொஞ்சங் கொஞ்சமாய், சுமார் 23 வருஷ காலஅளவில் 6666 திருவாக்கியங்களாகத்தேவதூதர் மூலமாய் அத் திருமறை இவ்வுலகில் வெளிப்பட்டது. மனிதனிடத்தில் பொதிந்து கிடக்கும் அந்தரங்கமான அபார சக்தியை யெல்லாம் வெளிப்படுத்தி அபரிமிதமான ஜயமடையும்படி இன்றைக்கும் அம்மழையானது வேண்டிய மட்டும் மன்பதைக்கு உதவிபுரிந்து வருகின்றது. இவ்வுண்மையை எமது குர்ஆன் ஷரீபானது பின்வருமாறு

மறுபடியும் விளக்கியிருக்கின்றது: "பூமியானது மரண மடைந்தபின் அதற்கு அல்லாஹுதஆலா மீண்டும் உயிரைக் கொடுக்கிறான் என்று அறிந்துகொள்ளுங்கள்; உண்மையாகவே, நீங்கள் நன்குணரும்பொருட்டு நம் முடைய செய்திகளை உங்களுக்கு நாம் தெளிவாகச் செய் திருக்கிறோம்—"(57:17)

மதத்தின் நோக்கம் இன்னதென்றும் மனிதனுக்கு இறைவனால் அருளப்படும் தேவவாக்கின் அவசியம் இன்ன தென்றும் எமது குர்ஆன் ஷரீபைக்கொண்டு நீங்கள் உணர்ந்துகொள்வது இப்பொழுது உங்களுக்குக் கஷ்ட மாயிராது. மனிதர்களுக்கு அபரிமிதமான சக்திகளெல் லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும் அச்சக்தி களைச் செவ்வனே உபயோகப்படுத்தினால் அதனால் நமக் குண்டாகும் வெற்றிக்கோ அளவில்லை யென்றும் எமது திருமறையாகிய குர்ஆன் ஷரீபு மிகவிளக்கமாகக் கூறுகின்றது (குர்ஆன் அத்தியாயம் 95). நமக்குக்கொடு க்கப் பட்டிருக்கும் சக்திகளையெல்லாம் முழுவெற்றிக்குக் கொண்டுவருவது இகலோக வாழ்க்கையான இந்த 70, 80 வருஷங்களுக்குள் முடியாது; இகலோகத்தில் நம்மாலி யன்ற மட்டும் நமது சக்திகளையெல்லாம் வெளிக்கிளப்பி அபாரஜயம் பெறுவோமாயின் அதன் மிகுதியைப் பர லோகத்தில் அடையலாம். இகலோகத்தில் நம்முடைய சக் திகளைச் சரியான வழியில் செலவு செய்து சன்மார்க்க நெறியில் சிறிதேனும் ஜயம் பெற்றாலல்லாமல் மரணத்துக் குப்பின் நல்ல வழியில் ஓரங்குலங்கூட நம்மால் நகர முடி யாது. தேவலோகத்தில் நாம் சென்று ஜயம் பெறவேண்டு மாயின் மரணத்துக்கு முன் இகலோகத்தில் நம்முடைய சக்திகளை நல்வழியில் செலுத்திப் பக்குவப்படுத்திக்கொள்

ளவேண்டும். இகலோகத்தில் முழுப்பக்குவமும் அடைந்தவர்கள் பரலோகத்தில் எவ்வகைத் தடங்கலுமின்றி மேன்மேலும் வெற்றியடைந்து கொண்டே போவார்கள். இகலோகத்தில் நம்முடைய சக்திகளைச் சரியானபடி பரிபக்குவம் செய்து கொள்ளாவிட்டாலும் நம்முடைய அச்சக்திகளைத் தீயவழியில் செலுத்தியிருந்தாலும் அச்சக்திகளை வளரவொட்டாமல் நாம் தடை செய்து மழுங்கச்செய்திருந்தாலும் பரலோகத்துக்குச் சென்றவுடன் அங்கே நம்முடைய ஆத்மாவானது நேரே வெற்றிக்குரிய சன்மார்க்கத்தில் செல்லுதல் முடியாது; வெற்றிக்குரிய பக்குவத்தை யடையாமல் வியாதியடைந்திருக்கும் ஆத்மாவுக்குப் பரலோகத்தில் சிறிது பரிகாரம் செய்த பின்னரே அது வெற்றிக்குரிய நல்வழியில் வந்து சேரும். நாம் இகலோகத்தை விட்டுச் செல்லுமுன் பரலோகப்பிரயாணத்துக்கு வேண்டிய பக்குவத்தையடையவேண்டும்; இப்படிப்பட்ட பக்குவத்தை இகலோகத்தில் அடையாமல் நாம் இவ்வுலகத்தை விட்டு நீங்குவோமாயின் நம்முடைய குறைகளை நீக்கிக்கொண்ட பின்னரே சுவர்க்கானந்த விருத்தியை யடையக் கூடியதாயிருப்பதால் மாணத்துக்குப்பின் நாகமென்னும் ஓரிடத்திற்குச் சென்று அங்கே வேண்டிய காலம் தங்கியிருந்து நம்முடைய ஆத்ம வியாதியை அடியோடு போக்கிக்கொண்டு அதன் பிறகுதான் வெற்றிக்குரிய மார்க்கத்தில் செல்ல ஆரம்பிக்கவேண்டும்.

நரகத்தைப்பற்றிய முஸ்லிம் கொள்கை

மரணத்துக்குப் பின் ஆத்மவியாதியைப் போக்குவதற்கு வேண்டிய அந்த இடம் தான் நரகம் என்று எமது குர்ஆன் ஷரீபு விளக்கமாகக் கூறியிருக்கின்றது. நரக

மானது என்றென்றைக்கும் அழியக்கூடாத இடமென்று எமது முஸ்லிம்கள் நம்புவதில்லை. இகலோகத்தில் பக்குவமடையாமல் பாழாய்ப்போன ஆத்மாவைப் பரிசுத்தமடையச்செய்வது தான் நரகத்தின் தொழிலென்று எமது திருமறை வியக்தமாகக் கூறுகின்றது. இதனால் அந்நரகமானது ஊழியூழிகாலம் நிரந்தரமாயிருக்கத்தேவையில்லை. பரலோகத்தில் நம்முடைய சக்திகளைவெளிப்படுத்தி மேன்மேலும் தேவசன்னிதானத்தை (லிக்காவை) நோக்கிச் செல்வதற்கு வேண்டிய பரிபக்குவத்தை இகலோகத்தில் அடையாத ஆத்மாக்களைப் பக்குவப்படுத்தி விடவேண்டியது தான் நரகத்தின் தொழில். இகலோகத்தில் ஒருவன் சரீர ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமாயின் அவனுக்குத் திடமான தேகம் வேண்டும்; அஃதேபோல் பரலோகத்தில் ஆரோக்கியத்துடன் ஒருவன் மேன்மைபெற விரும்புவானாயின் அவனுக்குப் பரிசுத்தமான ஆத்மா வேண்டும். இகலோகத்தில் நம்முடைய சரீரத்துக்கு வியாதி யுண்டாகுங் காலத்தில் வைத்தியசாலைகளுக்குச் சென்று நம்முடைய நோய்களுக்குச் சிகிச்சை செய்துகொள்ளுகிறோம்; அவ்வாறே இகலோகத்தில் ஆத்மாவானது பிணியடையும் பக்ஷத்தில் அப்பிணியை நீக்குவதற்கு ஆண்டவனுடைய நரகமானது மரணத்துக்குப் பின் அமைக்கப்பட் டிருக்கின்றது. நரகமானது ஆத்மாவின் சகல வியாதிகளையும் போக்கிப் பரலோகப் பிரயாணத்துக்கு அதைப் பக்குவப்படுத்துகின்றது. நரகமானது ஆண்டவனுடைய கோபாக்கினி யென்று சொல்வதற்கில்லை; ஆனால் அருளாளனாகிய அல்லாஹுத் தஆலாமனிதனுடைய ஆத்மாவின் பரிசுத்தத்துக்காகவே நல்ல எண்ணத்துடன் நரகலோகத்தைப் படைத்திருக்கிறான். தன்

குழந்தைக்கு ஓர் அவயவத்தில் கட்டிச்சிரங்கு உண்டான வுடன் அதன் தாயானவள் அச்சிரங்குக்கு வேண்டிய சத்திரச்சிகிச்சை யெல்லாம் செய்ய முன்வருவதே போல், நாம் நம்முடைய துர்நடத்தையாலும் தீய குணத்தாலும் இகலோகத்தில் நம்முடைய ஆத்மாவைப் பாழ்படுத்தி அதற்கு வியாதியை உண்டு பண்ணி விடும்போது அதற்குச் சத்திரச்சிகிச்சையெல்லாம் செய்வதற்கு நரகமானது நமது ஆத்மாவுக்குத் தாயாராயிருக்கிறது. இகலோகப் பிணியைப் போக்கப் பரிஹாரிகள் ஏற்பட்டிருப்பதே போல் பரலோகப் பிணிக்கும் பற்பல வைத்திய நிபுணர்களுண்டு. இப்படிப்பட்ட வைத்திய நிபுணர்களாகிய தேவதூதர்கள் நரகத்தில் நம்மைப் போட்டுச் செம்மையாய் வாட்டி நமது ஆத்மவியாதியை யெல்லாம் அடியோடு ஓட்டி நம்மைப் பரலோகப் பிரயாணத்துக்குப் பக்குவப் படுத்துவார்கள். இகலோக வைத்திய சாலையில் குழந்தைகளுக்கு அதிக வலியும் அழுகையும் உண்டாவது சகஜம் தான். ஆனால் அந்தச்சிகிச்சையானது குழந்தையின் நன்மைக்குத்தானென்று தாய் கருதுகிறாள். அவ்வாறே நரக லோகத்திலும் அழுகையும் முணக்கமும் கூக்குரலும் அதிகமாகத்தா னிருக்கும். அவையெல்லாம் நம்முடைய நன்மைக்கே. நம்முடைய வியாதியைப் போக்கிக் கொள்வதற்குச் சகிக்கமுடியாத சிகிச்சைகளைச் செய்துகொண்டும் தின்னச்சகிக்காத மருந்துகளைத் தின்றுகொண்டுந் தான் சுகம் பெறவேண்டும். குழந்தையினிடத்தி லிருக்கும் அத்தியந்த அபிமானத்தால் தாயானவள் அதிககஷ்டமான வைத்திய முறைகளை யெல்லாம் அக்குழந்தைக்குச் செய்துவைக்கிறாள்; இவ்வாறே நரகமும் நம்மை நல்வழிப் படுத்த வேண்டுமென்னும் அபிமானத்தால்தான் இப்படி

யெல்லாம் சிகிச்சைசெய்கிறது.* இக்காரணத்தால்தான் குர்ஆன் ஷரீபில், "பஉம்முஹு ஹாவியா"—நரகமானது அவனுக்குத்தாயாயிருக்கும், என்று ஒருவாக்கியம் காணப் படுகின்றது. இன்னும், "மவ்வாக்கு முன்னாரு ஹிய மவ் லாக்கும்"—உம்முடைய இருப்பிடமானது நெருப்பா யிரு க்கிறது; அது உமக்கு நண்பனாயிருக்கும், என்று மற்றொரு வாக்கியம் பிறந்திருக்கிறது.

ஜன்ம சித்தாந்தம்

முஸ்லிம்களின் நரகம் இப்படிப்பட்ட தென்று நாம் சொல்லும்போது மனிதனுடைய ஆவியானது ஜன்மத்துக் குப்பின் ஜன்மமாய்க் கூடுவிட்டுக்கூடுபாய்கிறதென்று சிலர் சொல்லும் சித்தாந்தத்தையும் உடன் ஆராயவேண்டியிருக் கிறது. இந்தச் சித்தாந்தமானது ஒருவனுடைய நம்பிக் கைக்குப் பொருத்தமானதா யில்லாவிட்டாலும் அவன் அச்சித்தாந்தக்காரரின் தர்க்கத்துக்குமட்டும் பதில்சொல்ல முடியாதவன்போல் தயங்குகிறான். முஸ்லிம்களின் கொள்

---

*துன்பமென்பதே "ஒருவன் தன்னோடும் தனது ஜீவ நியதி யோடும் ஒத்து நடவாமையை உணர்த்தும் ஓர் அறிகுறி. துன்பத் தால் உண்டாகும் முக்கிய பிரயோஜனம், மனிதர்களிடத்திலுள்ள அப்பிரயோஜனமும் அசுத்தமுமான எல்லாவற்றையும் எரித்து அவனைச்சுத்தப்படுத்துவதேயாம். எவன் பரிசுத்தனாயிருக்கிறானோ அவனுக்குத் துன்பமென்பதே கிடையாது. களிம்பு நீங்கியபின் தங்கத்தைப் புடம்போட யாதொரு காரணமும் இல்லை; அதுபோ லவே, பூரண பரிசுத்தத்தையும் ஞானத்தையும் அடைந்தவன் துன்பமடைய யாதொரு காரணமும் இல்லை." ஜேம்ஸ் ஆலன் எழுதிய "மனம்போல வாழ்வு," ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் மொழி பெயர்ப்பு இரண்டாம்பதிப்பு 1916-ல் அச்சிட்ட புத்தகம் 34-ம் பக்கம் பார்க்க.

கைப்படி எக்காரணத்துக்காக நரகமானது அமைக்கப்பட்டிருக்கிறதோ அதேகாரணத்துக்காகத்தான் ஹிந்துமதத்தில் பலஜன்மம் உண்டென்னும் சித்தாந்தம் ஏற்பட்டிருக்கிறது. "பிர்மலோகத்தையடைந்து அங்கே மோக்ஷம்பெற வேண்டுமாயின் நாம் இகலோகத்தில் சிலபக்குவங்களையெல்லாம் அடைந்து ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும். அப்படிப்பட்ட பரிபக்குவமடைந்தாலொழிய நம்மால் மோக்ஷமடைய முடியாது. ஆதலின் மோக்ஷத்துக்கு வேண்டிய பரிபக்குவத்தையடையாமல் நாம் இகலோகத்தில் மாணமடைவோமாயின் மறுபடியும் இவ்வுலகிலேயே ஜன்மமெடுத்துத் தானே அப்படிப்பட்ட யோக்கியதையை அடையவேண்டும்," என்று ஹிந்து நேசர்கள் வாதித்து வருகின்றனர். மோக்ஷத்துக்கு வேண்டிய யோக்கியதைகளை நாம் இகலோகத்தில் அடையவேண்டும்; பரலோகம் சென்றால் அங்கே இந்த யோக்கியதைகளைப் பெறமுடியாது; ஆதலின் இவ்வுலகில் மறுபடியும் மறுபடியும் ஜன்மமெடுத்தே மோக்ஷத்துக்கு வேண்டிய பரிபக்குவத்தை அடையவேண்டும். இதுதான் அவர்களுடையகக்ஷி. அவர்கள் சொல்லும் சமாதானம் யுக்திக்குப் பொருத்தமானது போல்தான் காணப்படுகிறது; அவர்களுடைய தர்க்கமும் ரத்து செய்யமுடியாது போலவே புலப்படுகின்றது. ஆனால் அவர்கள் சொல்வதுபோல் நாம் இவ்வுலக இயற்கையில் ஒன்றையும் காணக்கூடவில்லை. நம்மைச்சுற்றி நான்கு புறத்திலும் இவ்வுலகில் காணப்படும் உண்மையானது அவர்கள் சொல்வதற்கு நேர்மாறாய்த் தோன்றுகிறது. இவ்வுலகில் அணுவுக்குள் அணுவாய் மிகச்சிறு பொருளாய்க் காணப்படும் அந்த அதிஸூக்ஷ்ம நிலைமையிலிருந்தும் (electronic collocations) அதற்குமுன்னுள்ள ஒரு

விதமாயா நிலைமையிலிருந்தும் (ethereal specks) மனித னுடைய தேகமாகிய இவ்வுன்னத நிலைமையை எட்டும் வரையில் எல்லாவஸ்துக்களும் இயற்கையாகவே கீழே யுள்ள ஒருஸ்தானத்திலிருந்துமேலேயுள்ள மற்ருெருஸ்தா னத்தை நோக்கி மேன்மேலும் முன்னுக்கு வந்துகொண் டேயிருப்பதை நாம் ஒவ்வொரு நாளும் இடை விடாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறேம். இவ்வுலகிலுள்ள ஒவ் வொரு வஸ்துவும் இடைவிடாமல் மேன்மேலும் முன் னுக்கு வந்துகொண்டேயிருக்கிறதல்லாமல் யாதொரு வஸ் துவும் ஒரு முறை முன்னேக்கி வைத்த அடியைப் பின் னுக்கிழுப்பதில்லை. இது ஸயன்ஸின் உண்மை. கீழ்ப்படி யிலிருந்து ஒவ்வொருவஸ்துவும் மேற்படிக்குப் போகின்ற தேயொழிய ஒரு முறை மேற்படிக்குப்போன எப்படிப் பட்டவஸ்துவும் எக்காரணத்தை முன்னிட்டும் கீழ்ப்படிக் குத் திரும்புவதில்லை. இது இறைவனுடைய சட்டம். கீழ்ப் படியிலிருந்து மேற்படிக்குப் போகும்போது, சிலவஸ்துக் கள் அப்படிமுன்னுக்கு வருங்கால் தம்முடைய நிலைமை யில் பின்னமடைகின்றன; இப்படிப் பின்னப்பட்ட வஸ் துக்கள் அந்தப்பின்னத்தை நீக்கிக்கொள்ளும் பொருட் டுப் பழய ஸ்தானத்துக்கு ஒருபோதும் திரும்பிப்போவ தில்லை; கீழ்ப்படியிலிருந்து மேற்படிக்குச் செல்லும்வழியில் ஒருகுறைவு நேரிட்டால் அவ்வஸ்துவானது மறுபடியும் அக்குறைவை நீக்கிக்கொள்ளும் பொருட்டு முன்பிருந்த கீழ்ப்படிக்குச் செல்வதில்லை; ஆனல் அந்த மேற்படிக்கு வந்தவுடன் அக்குறைவை நீக்குவதற்கு வேறு உபாயங் கள் உண்டாகின்றன. உதாரணமாக ஒரு மாத்தின் வித்தா னது சரியானபடி முதிர்ச்சியடையாமல் பிஞ்சிலேயே பழு த்துவிடுமாயின் அதன் குறைவை நீக்குவதற்கு ஒருவரும்

அவ்விதையை மறுபடியும் அம்மரத்தில் கொண்டுபோய் ஒட்டிவைக்கமாட்டார்; ஆனால் சரியானபடி முதிர்ச்சி யடையாத விதையொன்று இருக்குமாயின் அதன் குறைவை நிறைவேற்ற அதை நல்ல நிலத்தில் நட்டுத் தக்க எருவிட்டுப் பக்குவமாய்ப் பாதுகாத்தல் வேண்டும். இப்படிச் செய்தால் மட்டுமே பின்ன முள்ள வித்தானது தனது குறைவை நீக்கிக்கொண்டு தன் தாய் மரத்தைக் காட்டினும் திடமுள்ளதாக முளைக்கின்றது. இப்படிப் பட்ட விதியானது தாவரவர்க்கத்துக்கு மட்டும் செல்லத் தக்கதென்று எண்ணவேண்டாம். தாது வர்க்கத்திலும் பிராணிவர்க்கத்திலும் இந்த விதிதான் காணப்படுகின்றது. இன்னுமோர் உதாரணம் எடுத்துக்கொள்வோம். தாயின் கர்ப்பாசயத்தில் பத்து மாத காலத்துக்குள் ஒருமனிதப் பிண்டமானது இவ்வளவு தூரம் பக்குவமடைந்து வளர வேண்டுமென்பது ஆண்டவனுடைய கட்டளை; இப்படி யிருக்கும்போது ஏதேனும் ஒரு சிசுவானது அங்கஹீனத் துடன் பின்னமாய்ப் பிறக்கும்பக்ஷத்தில் அந்தப்பின் னத்தை நீக்கி அங்கஹீனமில்லாமல் நல்லகுழந்தையாக ஆக்கவேண்டுமாயின் அந்தச்சிசுவை யாரும் மறுபடியும் கர்ப்பாசயத்துக்குத் திருப்பி அனுப்புவதில்லை; அப்படித் திருப்பி யனுப்பவேண்டிய அவசியமுமில்லை; அப்படி அனுப்பினபோதிலும் பிரயோசனமுமில்லை. ஆனால் அக் குழந்தையின் பின்னத்தை நீக்க வைத்தியசாஸ்திரம் உதவிபுரிய வருகின்றது. இயற்கையாய் ஆண்டவன் அக் குழந்தையின் அங்கஹீனத்தை நீக்கியிருப்பானாயின் அது மெத்த இலேசாகத்தான் இருந்திருக்கும்; வைத்தியசாஸ் திரமுறைப்படி* அந்தப்பின்னத்தை நீக்குவதாயின் அக் குழந்தைக்கு அளவு கடந்த நோவு தான் உண்டாகும்.

எவ்வளவு சகிக்கமுடியாத துன்பமாயிருந்த போதிலும் அக்குழந்தையின் அங்கஹீனத்தை வைத்தியமுறையால் மட்டும் திருத்தமுடியுமல்லாமல் தாயின் கர்ப்பாசயத்துக்குள் அக்குழவியை அனுப்புவது ஒருபோதும் முடியாது. இது இயற்கைக்கு மாறாகும்; இறைவனுடைய சட்டமும் அப்படியில்லை. எவ்வளவு அங்கஹீனமாயிருந்த போதிலும் ஒருமுறை தாய்வயிற்றிலிருந்து குழந்தை வெளிப்பட்டபின் அது தன்னுடைய குறைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு ஒருபோதும் தன் தாய்வயிற்றில் திரும்ப நுழைவதில்லை. குழந்தைகளின் நிலைமை இவ்வாறு இருக்கும்போது மனிதன் மட்டும் ஒருமுறை இவ்வுலகைவிட்டுப் போய்விடும்பக்ஷத்தில் அவன் எவ்வளவு ஆத்ம பக்குவக் குறைவுடன் சென்றபோதிலும் ஏன் அவன் தன் குறைகளை நிவர்த்திசெய்து கொள்ளும் பொருட்டு இவ்வுலகில் மீண்டும் பிறக்கவேண்டும்? உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் கீழ்ப்படியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும்போது வழியில் பின்னங்கள் உண்டாகும் பக்ஷத்தில் அப்பின்னங்களை நீக்கிக்கொள்ளும் பொருட்டு முன்னிருந்த கீழ்ப்படிக்குத் திரும்பாமலிருக்கும்போது மனிதன் மட்டும் தன்குறைகளை நிவர்த்திசெய்து கொள்ளும்பொருட்டு ஏன் இப்பூவுலகுக்குத் திரும்பவேண்டும்? கீழ்ப்படியிலிருந்து மேற்படிக்குச்செல்லும்போது இடையிலுண்டாகும் குறைகளுக்கெல்லாம் மேற்படிக்குச்சென்றபின் சிகிச்சை செய்வது இவ்வுலகில் நாம் காணும் இயற்கையாயிருக்கிறது; வஸ்துக்கள் விருத்தியடைவதற்கும் இதுதான் தக்கமார்க்கமென்று இறைவன் தன் திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறான்; இவ்வாறு இறைவனுடைய சட்டம் அமைந்திருக்கும்போது மனிதன்மட்டும் மீண்டும் மீண்டும் தாழ்ந்த

இனங்களில்கூட இவ்வுலகில் ஜன்மமெடுத்துத்தான், தன் குறைகளை நிவர்த்திசெய்து கொள்ளவேண்டுமென்று வாதிப்பது நமது சாதாரண புத்திக்கும் முரணுயிருக்க வில்லையா? உலகத்திலுள்ள இதரவஸ்துக்கள் மனிதனு டைய தேகத்தில் சம்பந்தப்பட்டு அத்தேகத்துடன் ஐக் கியமாகும்போதும் நாம் மேலே சொன்ன உண்மையைத் தான் மறுபடியும் காண்கிறோம். நாம் ஒவ்வொரு நாளும் உட்கொள்ளும் ஆகாரமானது நாளடைவில் விந்துவாகவும் நாதமாகவும் மாறிக் கடைசியில் ஒரு குழந்தையாக அது வெளிப்படுகின்றது. நாம் உட்கொள்ளும் ஆகாரமானது குழந்தையாக ஆகுமுன் அநேக துறைகளின் வழியாகப் புகுந்து அது நமது தேகத்தில் மாறுபாடு அடைகின்றது. சிலசமயங்களில் அரைகுறையாகச் சமைக்கப்பட்ட ஆகா ராதிகளை உட்கொள்ளுகிறோம்; அதனால் நமக்கு வயிற்றில் வலியுண்டாகிறது; அவ்வலியைப்போக்க ஒரு மருந்து சாப்பிடுகிறோம்; உடனே குணமுண்டாகிறது. ஆனால் அரைகுறையாகச் சமைத்த பதார்த்தங்களை உட்கொண்ட படியால் வயிற்றில் வலியுண்டாகிறதென்று எண்ணி எவ ரும் அப்படி உட்கொண்ட வஸ்துக்களைக் கக்கி மறுபடியும் நன்றாகச் சமையல் செய்யும்படி சமையலறைக்கு அனுப்பு வதில்லை. ஜீரணக் குறைவுண்டாகும்பக்ஷத்தில் அந்த அஜீரணத்தை மாற்ற மருந்து சாப்பிடுகிறோமல்லாமல் வயிற்றுக்குள் போனதைக் கக்கி மறுபடியும் சமைப்ப தில்லை. அஜீரணத்துக்கு மருந்துசாப்பிட்டால் அரைகுறை யாய் வெந்த பதார்த்தமெல்லாம் ஜீரணமாகி இரத்தத் துடன் கலக்க ஆரம்பிக்கிறது. சில சமயங்களில் இரத்த மானது தனது தாதுபுஷ்டியை யிழந்து விடுவதுண்டு. இத னால் அந்த இரத்தத்தை மறுபடியும் இரைப்பை ஈரல் முத

லியகருவிகளின் வழியே மறுபடியும் சுற்றிவரும்படி திரும்ப அனுப்புவதில்லை; ஆனால் இரத்தத்திலுள்ள தாதுபுஷ்டியை வன்மைப்படுத்த வேண்டுமாயின் வெளியிலிருந்து வேறு சில மருந்துகள் உட்கொள்ள வேண்டும். இவ்வாறே தர்துவிர்த்தியில்லாத இரத்தத்திலிருந்து புலஹீனமான விந்தும் நாதமும் உற்பத்தியாகும் பக்ஷத்தில் இந்திரியங்களை வன்மைப்படுத்த மருந்துகள் சாப்பிடவேண்டுமல்லாமல் பலஹீனமான விந்துவையும் நாதத்தையும் திரும்பவும் இரத்தாசயத்துக்கு அனுப்புவதால் பயனுண்டாக மாட்டாது. இப்படிப்பட்ட பலஹீனமான விந்துநாதத்தால் பலஹீனமுள்ள ஒருசிசு உற்பத்தியாயின் அதற்கு வேறு மருந்துகள் கொடுத்து அப்பலஹீனத்தை மாற்றவேண்டுமல்லாமல் அச்சிசுவை மறுபடியும் தாய்வயிற்றுக்குள் அனுப்புவதால் யாதுபயன்? இவ்வாறே நாம் இவ்வுலகில் கண்ணெடுத்துப் பார்த்த இடத்திலெல்லாம் அவ்வுண்மையானது செவ்வனே காணப்படுகிறது. இதுதான் தேவகட்டளை. இவ்வாறு இருக்கும்போது மனிதன் மட்டும் அரைகுறையானபக்குவத்துடன் இவ்வுலகைவிட்டு நீங்க நேரும் பக்ஷத்தில் அவன் மறுபடியும் இவ்வுலகில் மனிதனாகவோ அல்லது அவசியமானால் அதைக்காட்டிலும் தாழ்ந்த பிராணியாகவோ ஜன்மமெடுத்துத்தான் தன் குறைகளை நீக்கிக்கொண்டு மோக்ஷத்துக்கு வேண்டிய பரிபக்குவத்தை அடையவேண்டுமென்பது ஆண்டவனுடைய சட்டத்துக்கு முரணாய்க் காணப்படவில்லையா? இக்காரணத்தால் தான் எமது இஸ்லாமிய வேதமாகிய குர்ஆன் ஷரீபு ஜன்மம் உண்டென்பதை ஒத்துக்கொள்ளவில்லை. இது இறைவனுடைய கட்டளை. இதனால் தான் மனிதன் அரைகுறையான பக்குவத்துடன் இவ்வுலகைவிட்டு நீங்கு

வானாயின் அக்குறைகளெல்லாம் நீங்கிச் சுவர்க்கத்துக்கு வேண்டிய பக்குவத்தை அவன் அடையுமட்டும் நரகத்தில் போட்டு வெதுப்பப்பட்டு அப்பால் கரைசேர்க்கப் படுகிறான் என்று எமது வேதம் முறையிடுகின்றது. இதைத் தான் எம்போன்ற அறிஞர்கள் ஒத்துக்கொள்கின்றனர். இவ்வுலகைவிட்டுப் போனமனிதன் அவன் எவ்வளவு பக்குவக் குறைவுள்ளவனா யிருப்பினும் அக்குறைகளை நீக்கிக்கொள்ள அவன் ஒருபோதும் இவ்வுலகில் மீண்டும் வரமாட்டான்; ஆனால் அவன் செல்லக்கூடிய அப்பர லோகத்திலேயே அவனுடைய குறைகளை நீக்குவதற்கு ஆண்டவன் சிகிச்சைசெய்வான். அதுதான் நரகமென்பது. இக்காரணத்தால்தான் ஹிந்துக்களின் ஜன்ம சித்தாந்தத்தைக் காட்டினும் எமது நரக சித்தாந்தமே சிலாக்கியமானதாகவும் ஆண்டவனுடைய அமைப்புக்கு ஒத்ததாகவும் காணப்படுகிறது.

கர்ம சித்தாந்தம்.

ஜன்ம சித்தாந்தத்தை ஒத்ததுதான் "கர்மசித்தாந்த"மும். இரண்டும் ஒரேவித சித்தாந்தத்தையே குறிப்பிடுகின்றன; ஆனால் "ஜன்மசித்தாந்த"மானது மனிதன் "ஜன்மமெடுத்தே தன் பாபங்களை யெல்லாம் போக்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறது; "கர்மசித்தாந்த"மானது ஏன் மனிதனுக்கு இப்படிப்பட்ட பிறவி யுண்டாகிறதென்று கூறுகின்றது. மனிதன் பிறக்கும்போது பல்வேறுவகைப்பட்ட படித்தரத்தில் பிறக்கிறான். ஒருவன் மேன்மையான படித்தரத்திலும் மற்றொருவன் தாழ்மையான படித்தரத்திலும் பிறப்பதன் காரணம் அவனவனுடைய பூர்வஜன்மக்கர்மம்தான் என்று அத்கக்ஷி

க்காரர் வாதிக்கின்றனர். சிலர் பிறக்கும் போதே செல்வவான்களின் வயிற்றில் தோன்றுகிறார்கள்; மற்றும் சிலர் தமது ஜனனகாலத்திலேயே தாங்கமுடியாத தரித்திரத்தில் பிறக்கிறார்கள். சிலர் பணக்காரராய்ப் பிறந்து ஏழையாகிறார்கள்; இன்னும் சிலர் ஏழையாய்ப் பிறந்து பணக்காரராகின்றனர். சிலர் பிறக்கும்போதே சில அங்கஹீனத்துடன் தோன்றுகிறார்கள்; மற்றும் சிலர் கைகால் முதலிய உறுப்புக்கள் சுகமாயிருக்கும்படி ஜன்மமெடுக்கிறார்கள். இப்படிப்பட்ட வேறுபாடுகளுக்கெல்லாம் காரணம் யாது? இவ்வாறு உலகில் காணப்படும் பல்வேறு வகைப்பட்ட மாறுபாடுகளுக் கெல்லாம் நம்முடைய முன் ஜன்மக் கர்மந்தான் காரணமென்று நாம் ஒத்துக்கொள்ளாமற் போவோமாயின் இப்படிப்பட்ட பக்ஷபாதங்களுக் கெல்லாம் இறைவன்தான் காரணமென்று ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படியாயின் பரிசுத்தமான கடவுளின்மீது அபாண்டமான ஒருதோஷத்தைக் கற்பிப்பதாகும்; இக்காரணத்தால்தான் கர்மத்தை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்கின்றனர். இவ்வுலகில் நாம் காணும் பல்வேறுவகைப் படித்தரத்துக்கெல்லாம் காரணம் அவரவர் முன்ஜன்மத்தில் செய்த கர்மந்தான் என்பது ஹிந்துமதக் கொள்கை. ஒருவன் பல்லக்கில் ஏறிச் சவாரி செய்கிறான்; மற்றொருவன் அப்பல்லக்கைத் தூக்கிச் சுமக்கிறான். ஈதெல்லாம் அவனவனுடைய கர்மந்தான் என்கின்றனர். நம்முடைய ஜனனகாலத்தில் நம்மையறியாமல் உண்டாகும் சுகதுக்கத் துக்கும் நன்மை தீமைகளுக்கும் நம்முடைய முன்ஜன்மக் கர்மமே காரணமென்று கர்மவாதிகள் கூறுகின்றனர். நம்முடைய தீயகர்மங்களை யெல்லாம் ஒழிப்பதற்குப் பற்பல ஜன்மங்களை நாம் மீண்டும் மீண்டும்

எடுத்தாக வேண்டுமாம். ஒருஜன்மத்தில் செய்த கர்மங்களை மற்றொரு ஜன்மத்தில் அனுபவித்துக்கொண்டே மனிதர்கள் கர்மக்கடலில் உழன்றுகொண்டு வருகிறார்களாம். இவ்வாறு கர்மவாதிகள் சொல்வதெல்லாம் மேல்நோக்காய்ப் பார்ப்பதற்கு மிக அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் உண்மை எவ்வாறு இருக்கிறதென்று நாம் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தல் வேண்டும்.

"வினையிட்டவன் வினையறுப்பான், தினையிட்டவன் தினையறுப்பான்," என்பது இவ்வுலகில் காணப்படும் உண்மைதான்; இதன்தத்துவத்தை, பௌல் என்பவரால் அமைக்கப்பட்ட மாதா கோவில் மார்க்கத்தைத் (Churchianity) தவிர மற்றெல்லா மதங்களும் ஒத்துக்கொண்டிருக்கிறன. அவனவன் செய்தகாரியத்தின் லாப நஷ்டத்தை அவனவன் அனுபவித்தே தீரவேண்டுமென்பது தான் மற்றெல்லாமதங்களின் கொள்கை. இவ்வுலகில் காணப்படும் பல்வேறுவகைப் படித்தரங்களுக்குக் காரணம் அவரவர் இவ்வுலகில் செய்யும் காரியம் தான். பல்லக்குச் சுமப்பவனுடைய பிள்ளை பல்லக்கே சுமக்கவேண்டு மென்று அவனைப் பெற்றோரும் மற்றோரும் பலவந்தம் செய்துவிட்டுப் பிறகு அவனுடைய முன்ஜன்மக்கர்மத்தால் அப்பையன் பல்லக்குச் சுமக்கிறான் என்போமாயின் அது நியாயமாகுமோ? அப்பையனுக்குத் தக்க கல்விப்பயிற்சியைக் கொடுத்து அவனுடைய இஷ்டம்போல் இவ்வுலகில் வேறெந்தத்தொழில் செய்தாலும் செய்யலாம் என்று அவனை எதேச்சையாய் விட்டுவிட்டால் அப்பையனே பின்னொருசமயம் தன்தகப்பன் சுமந்த பல்லக்கில் தானே ஏறும்படியான பிரமயம் நேரிடலாம். இப்படி யெல்லாம் செய்யாமல் பல்லக்குச்

சுமப்பவன் பிள்ளை அப்பல்லக்கையே சுமக்கவேண்டுமெ ன்று அவனே எண்ணினாலும் சரி, அவனை மற்றவர்கள் நிர்ப்பந்தப்படுத்தினாலும் சரி, அதெல்லாம் அவனுடைய முன்ஜன்மக்கர்மமென்று எங்ஙனம் சொல்வது? அவனு டைய சுகதுக்கத்துக்கு அவனேகாரணமல்லாமல் அவனு டைய முன்ஜன்மக்கர்மம் என்செய்யும்? நாம் இவ்வுலகில் அனுபவிக்கும் சுகத்துக்கெல்லாம் நாமே ஜவாப்தாரியல் லாமல் நம்முடைய முந்தியகர்மம் ஒன்றும் செய்வதில்லை. இதன் சம்பந்தமாய் இன்னொரு விஷயமும் கவனிக்கவேண் டும். உலகில் சுகதுக்க மென்பதெல்லாம் அவனவனுடைய மனதைப் பொறுத்ததாயிருக்கிறதல்லாமல் இன்னதுதான் சுகமென்றும் இன்னதுதான் துக்கமென்றும் வேறொரு வர் இலக்ஷணம் சொல்வது தகாது. ஒருவன் துக்கமென்று கருதுவதையே மற்றொருவன் சுகமென்று எண்ணலாம். பல்லக்கில் ஏறிச்செல்பவன் ஒருவனைக்கண்டு வேறு சிலர் அவனைச்சுகபுருஷன் என்று நினைக்கலாம்; ஆனால் அவ் வாறு ஏறிச்செல்பவனுடைய மனத்தின் கண்ணுள்ள சஞ் சலங்களை யெல்லாம் சீர்தூக்கிப்பார்ப்போமாயின் அவன் தன்னைச் சுகபுருஷன் என்று நினைக்கிறானோ என்பதுதான் சந்தேகம். அவனுடைய மனத்திலுள்ள சஞ்சலங்களை யெல் லாம் நோக்கும்போது அவனுக்குப் பல்லக்குச் சுமப்பவன் தன்னுடைய நிலைமையை மிகச் சுகமுடையதாகக் கருத லாம். பல்லக்கில் ஏறிச்செல்பவன் பலவகைச் சங்கடங்க ளுக்குள் சிக்கிக்கொண்டு தன் நிலைமையை மிகவும் துக்க மான நிலைமையென்று வருந்துகிறான். அவனுடைய பல்லக் கைத் தூக்கிச்சுமப்பவன் தன்மனதில் கிஞ்சித்தும் கவலை யில்லாமல் எதேச்சையாயிருந்து கொண்டு தன்னுடைய நிலைமைதான் சுவர்க்கானந்த நிலைமை யென்று சந்தோ

ஷிக்கிறான். இப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் இருவரும் இருக்கும்போது, பல்லக்கில் ஏறிச்செல்பவன் சுக புருஷனென்றும் அவனைத்தூக்கிச் சுமப்பவன் பாபியென்றும் நாம் பொதுவாக எண்ணி, பல்லக்கில் ஏறுபவனுடைய சுகத்துக்குக்காரணம் அவனுடைய முன்ஜன்ம நல்வினை யென்றும் அப்பல்லக்கைத் தூக்கிச்சுமப்பவனுடைய துக்கத்துக்குக்காரணம் அவனது முன்ஜன்மத் தீவினையென்றும் நாம் முடிவுசெய்வதன் தாத்பரியம்தா னென்ன? இப்படியே இவ்வுலகில் தனிகர்களின் குடும்பங்களில் பிறப்பதெல்லாம் நல்வினையின் பயனென்றும் தரித்திரன் வயிற்றில் பிறப்பதெல்லாம் தீவினையின் பயனென்றும் எவ்வாறு ஒரு மொத்தமான முடிவைச் செய்தல் முடியும்? ஒருவன் தன்னுடைய ஏழ்மைத் தனத்தைப் பரமானந்தமென்று கருதலாம். பட்டினத்து அடிகள், இப்ராஹீம் முபுனு அத்ஹம்போன்ற பலதனிகர்கள் தங்கள் தங்களுடைய திரவியமே தங்களுக்குத் துக்கசாகரமென்று கருதலாம். இதனால் இன்னது தான் நல்வினையின் பயனென்றும் இன்னதுதான் தீவினையின் பயனென்றும் யாரால் எவ்வாறு முடிவுசெய்தல் முடியும்?

இன்னும், தனிகர்களையும் தரித்திரர்களையும் பல்லக்கில் ஏறுபவனையும் அப்பல்லக்கைச் சுமப்பவனையும் மறுபடியும் கவனிப்போம். கர்மா என்பது கடவுளால் அமைக்கப்பட்ட ஒருசட்டம்என்கின்றனர். அதுகடவுளின் சட்டமாயிருக்கும்போது அக்கடவுளே நல்வினை இன்னதென்றும் தீவினை இன்னதென்றும் முடிவு செய்தல்வேண்டும். தனிகர்களின்வயிற்றில் ஜன்மமெடுப்பதும் பல்லக்கு ஏறும்படியான பாக்கியம் பெறுவதும் முன்ஜன்ம நல்வினைப் பயனென்று நாம் கருதுகிறோமே யல்லாமல் கடவுள் ஒரி

டத்திலும் பணக்காரர்களும் பல்லக்கு ஏறுபவர்களும் நல்வினை அனுபவிக்கும் சுகபுருஷர்களென்றும் மற்றவர்கள் தீவினைப்பயனை அனுபவிக்கும் பாபிகளென்றும் சொல்லவில்லை. நாம் நம்முடைய கேவலபுத்தியால் மேலென்றும் கீழென்றும் கருதுவதெல்லாம் தெய்வத்துக்கும் அப்படியே சம்மதமென்று யாரால் சொல்ல முடியும்? ஒருபல்லக்குச் சுமப்பவனை நாம் கண்ணால் கண்டு, அவனைக் கடவுள் சுகபுருஷனென்று மதித்திருக்கிறாரா இல்லையா வென்று தெரிந்துகொள்ளாமல் அவன் முன்ஜன்மத்தீவினைப் பயனால் இப்பொழுது பல்லக்குச் சுமக்கும்படியான துக்கத்திலிருக்கிறானென்று எங்ஙனம் நாம் முடிவுசெய்தல் கூடும்? தெய்வசட்டத்தில் நம்முடைய அபிப்பிராயத்தைச் செலுத்தி அது நல்வினைப்பயனென்றும் இது தீவினைப்பயனென்றும் எப்படி நாம்சொல்லமுடியும்? இவ்வுலகம் செவ்வனே நடைபெற வேண்டுமாயின் அதில் பல்வேறு வகைப்பட்ட படித்தரத்திலுள்ளவர்களும் அவசியம் இருந்தே தீரவேண்டும். நம்முடைய கேவலபுத்திக்கு எட்டிய மட்டும் இவ்வுலகில் சிலபடித்தரங்களை மேலான பதவியென்றும் வேறு சிலவற்றைக் கீழானபதவியென்றும் பாகுபாடுசெய்திருக்கிறோம். இப்படிப்பட்டமேற்பதவியிலும் கீழ்ப்பதவியிலும்உள்ள எல்லாவித மனிதர்களும் இவ்வுலக முன்னேற்றத்தின்பொருட்டு இருப்பது அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. நம்முடைய அபிப்பிராயப்படி மேற்பதவியிலுள்ளவர்களெல்லாரும் முன்ஜன்ம நற்கருமத்தால் அம்மேற்பதவியிலிருக்கிறார்களென்றும் கீழ்ப்பதவியிலுள்ளவர்களெல்லாரும் முன்ஜன்மத் தீக்கர்மத்தால் அக்கீழ்ப்பதவியிலிருக்கிறார்களென்றும் சொல்வோமாயின் கர்மசித்தாந்தத்தின்படி தீக்கர்ம்மானது (பாபமானது) இவ்வுல

நன்மைக்காக இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறதென்று ஒத்துக் கொள்ளநேரும். அதாவது இவ்வுலகத்தின் நன்மைக்காக ஆண்டவன் மீது ஒரு அடாதபழியைச் சுமத்தவேண்டியிருக்கிறது. பற்பல வேறு வகைப்பட்ட தொழிலாளரும் இவ்வுலகுக்கு அவசியம் வேண்டும்; நம்மெல்லோரின் சௌகரியத்துக்காகவே நாம் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் வெவ்வேறு தொழில் முகத்தால் உதவி புரியவேண்டும். உலகம் முன்னுக்கு வருவதாயின் அதில் பலவகைத்தொழிலாளரும் இருப்பது அவசியமே; பலபேர் பல வேலைகளைச்செய்தால்தான் பொதுவில் ஜனசமூகத்துக்கு நன்மை யுண்டாகும். இப்படிப்பட்ட நன்மைக்குக் கீழ்த்தரமனிதர்கள் அதிகம்வேண்டும். கீழ்த்தரமக்களெல்லோரும் முன்ஜன்மத்தின் பாபத்தால் (தீவினையால்) இப்படிப்பட்ட கதியில் ஜன்மமெடுத் திருக்கிறார்களென்போமாயின் இப்படிப்பட்ட பாபமானது இவ்வுலகில் நிரந்தரமாயிருக்க வேண்டுமென்று நாம் வேண்டிக் கொள்வது போல் காணப்படுகிறது. அதாவது, உலகின் நன்மைக்காகத் தீமையும் கூடவே யிருந்துகொண்டிருத்தல் வேண்டும். அதாவது நாம் தேசத்தொண்டு புரியவேண்டுமாயின் அடுத்த பிறவியில் தொண்டர்களாய்ப் பிறக்கும் பொருட்டு இப்பிறவியில் நாம் பாபமும் தீமையும் செய்துகொண்டே வரவேண்டும். கர்மவாதிகளின் சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டால் இப்படிப்பட்ட அசம்பாவிதமான முடிவு தான் உண்டாகிறது.

இவ்வுலகில் ஒருவன் மேற்படியி லிருந்தால் மற்றொருவன் கீழ்ப்படியில்தான் இருக்கவேண்டும்; எல்லோரும் ஒரேபடித்தரத்தில் இருப்பது முடியாது; ஒருவன் சுகமடைய வேண்டுமாயின் அதற்காக மற்றொருவன் தியாகம்

செய்யவேண்டியது அவசியம்தான். இவ்வாறெல்லாம் உலகம் பல்வகைப்பட்டிருப்பது அதன் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் அத்தியாவசியமா யிருக்கிறது. கீழ்ப்படியில் ஒருவன் இருப்பது அவனுடைய முன்ஜன்மப் பாபத்தின் பயனென்று சொல்வீர்களாயின் இவ்வுலக நன்மைக்காகவே ஆண்டவன் பாபத்தையும் நிரந்தரமாகப் படைத்திருக்கிறுனென்று ஒத்துக்கொள்ளல் வேண்டுமென்று முன்னமே கூறியுள்ளோம். ஆண்டவன் இவ்வுலகைப் படைத்தபோது அதன் முன்னேற்றத்துக்காகப் பாபத்தையும் கூடவே படைத்திருக்கிறுனென்று சொல்வது இஸ்லாத்தின் சித்தாந்தப்படி ஆண்டவனுக்கு ஓர் அபாண்டமான தோஷத்தைக் கற்பிப்பதாகிறது. ஆண்டவன் அதி பரிசுத்தமானவன்; அவன் எவ்வகைத் தோஷங்களும் அற்றவன். அவன் பாபத்தை வேண்டுமென்று படைத்தானென்பது நமக்கு மகாதோஷத்தை யுண்டுபண்ணும். நாம் இப்பொழுது இந்த ஜன்மத்தில் காணும் வித்தியாசங்களைத்தான் போனஜன்மத்தின் கர்மப்பயன் என்கிறோம்; ஆனல் இவ்வுலகத்தில் மனிதவர்க்கத்தை ஆண்டவன் முதன் முதல் படைத்தபோது எல்லோரும் ஒரேவிதமான உயர்நிலையில் இருந்திருக்க முடியாது; அப்பொழுதும் இப்பொழுதிருப்பதுபோல் அநேகம் படித்தரங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்குக் காரணமென்ன? அது எந்தக்கர்மத்தால் உண்டாயிற்று? முதன் முதல் உண்டான ஜன்மத்தில் மேன்மை தாழ்மையென்னும் வித்தியாசம் ஏற்பட்ட காரணமென்ன? அதற்குமுன்னர் ஜன்மமில்லாதபோது முதல் ஜன்மத்தில் ஏற்பட்ட வித்தியாசம் எக்காரணத்தால் ஏற்பட்டது? ஆண் பெண்ணுகப் பிறப்பதுகூடக் கர்மப்பயன் என்று அக்கர்மவாதிகள் கூறுகின்றனர்; இப்போது நாம்

பார்க்கும் ஸ்திரீ புருஷர்களெல்லாரும் போன ஜன்மக்கர்மத்தின் பயனால் இப்படி அவதரித்திருக்கிறார்கள் என்று சமாதானம் சொல்கிறோம்; ஆனால் இவ்வுலகம் ஆரம்பமான காலத்தில் முதன் முதல் மனிதவர்க்கத்தைக் கடவுள் சிருஷ்டித்தபோது ஆணும் பெண்ணுமாகவே அமைத்திருப்பார். அதற்குக் காரணமென்ன? எந்த முன் ஜன்மக்கர்மமானது அப்படி ஆதியில் ஆணையும் பெண்ணையும் அமைத்தது? இவ்வாறே ஆதியில் சிலர் தகப்பன்களாகவும் அவர்களுக்குப் பலர் புத்திரர்களாகவும் தோன்றினார்களே, அதன் காரணமென்ன? ஆதிசிருஷ்டிக்கு முன்னால் ஜன்மமில்லாதபோது எந்தக் கர்மத்தால் அக்காலத்தில் அப்படிப்பட்ட வித்தியாசங்களெல்லாம் உண்டாயின?

சுகமென்பது ஆண்டவனுடைய அருளேயன்றிக் கர்மத்தின் பயனல்ல.

நமக்கு இகலோகத்திலுண்டாகும் சுகதுக்கங்களுக்கெல்லாம் முன் ஜன்மக்கர்மமே காரணமென்று சொல்வோமாயின் ஆண்டவனால் தானாகவே நமக்காக ஆதியில் அமைக்கப்பட்டிருக்கும் சில சுகங்களுக்கு எந்தக் காரணத்தை நாம் அத்தாக்ஷியாகச் சொல்வது ? ஆண்டவன் இவ்வுலகின் நன்மைக்காகவும் அதன் சார்பால் நம்முடைய நன்மைக்காகவும் சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் பூமி மலை கடல் முதலிய சௌகரியங்களை யெல்லாம் ஆதியில் அமைத்திருக்கிறான். நாம் இவ்வுலகில் பாடுபட்டுச் சிறிது சுகமடைவது கூட மனிதவர்க்கத்தை ஆண்டவன் படைப்பதற்கு நெடுங்காலம் முன்னர் அவனால் சிருஷ்டிக்கப்பட்டிருந்த இயற்கைப் பொருள்களைக் கொண்டல்லவா ? உதாரணமாக மனிதன் படைக்கப்படு முன்னேமே ஆண்ட

வன் இப்பூமியில் தங்கத்தைப் படைத்திருக்கிறுன். பிறகு இத்தங்கத்தைக் கொண்டு ஒரு தனிகன் சுகமடைகிறுன். இப்படிப்பட்ட சுகத்துக்கும் இன்னும் சூரிய சந்திரர்க ளால் நாமடையும் சுகத்துக்கும் காரணம் யாது? ஈதெல் லாம் நமக்கு முன்னேயே படைக்கப்பட் டிருக்கின்றன. இவற்றிற்குத் காரணம் நம்முடைய முன் ஜன்மக் கர்மம் தானே? மனிதகோடியின் நன்மைக்காகப் பல்லாயிரக் கணக்கான வஸ்துக்கள் அம்மனிதன் சிருஷ்டிக்கப்படு முன்னேயே இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுலெல்லாம் நமக்குச் சுகமுண்டாகிறது. இவை யனைத்தும் நம்முடைய எந்த ஜன்மக் கர்மத்தால் நமக்குக் கிடைத்தன? இவையெல்லாம் நம்முடைய பூர்வஜன்மக் கர்மப்பயனுல் நமக்குக்கிட்டி யிருக்கின்றன வென்று ஒரு வரும் ஒருபோதும் சொல்லத் துணியார்; எல்லாம் இறைவ னருளால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே யன்றி வேறில்லை. மனிதர்கள் படைக்கப் படுவதற்குப் பன்னெடுங் காலமுன்னரே ஆண்டவனருளால் அனேக வஸ்துக்கள் இவ்வுலகில் அமைக்கப்பட்டிருக்கின்றன; அதன்பின் மனி தன் சிருஷ்டிக்கப்பட்டான்; உடனே மேற்சொன்ன வஸ் துக்களை யெல்லாம் தன் உபயோகத்துக்கு வரும்படி செய்துகொண்டான். ஈதெல்லாம் இறைவனருளே யொழிய வேறில்லை. மனிதன் படைக்கப் படுவதற்குப் பன்னெடுங்கால முன்னரே ஆண்டவன் தன் இயற்கை அருளால் அனேக வஸ்துக்களைப் படைத்திருக்கிறுனல்ல வா? அதற்குமுன்னேயே நம்முடைய கர்மமானது உற்ப த்தியாய் விட்டதென்று சொல்வோமாயின் அது முழு அசம்பாவிதமே யாகும். நமக்குண்டாகும் சுகத்துக்கெல் லாம் மூலகாரணம் நம்முடைய முன் ஜன்மக் கர்ம்மமென்று

சொல்லும்போது அப்படிப்பட்ட சுகத்தால் நமக்கொன்றும் ஆனந்தம் உண்டாக ஹேதுவில்லை. நாம் செய்த நல்வினைக்குக் கூலிதான் இச்சுகமென்று சொல்லுங் காலத்தில் இதனால் நாம் ஆனந்தமடைய ஒன்றும் காரணமில்லை. மேலும், நம்முடைய கர்மத்தின் பயனால் நமக்கு எவ்வளவு சுகமுண்டாகிற தென்று கருதுகிறோமோ அதைக்காட்டினும் ஆயிரமாயிரம்பங்கு அதிகமான சுகத்தையெல்லாம் ஆண்டவனுடைய அருளால் அமைக்கப்பட்டிருக்கும் சூரிய சந்திர நக்ஷத்திர கிரகங்களால் அடைகிறோம். ஆவியானது கூடுவிட்டுக் கூடுபாய்தல் முடியுமோ என்பதைப்பற்றி எமது குர்ஆன்ஷரீபு வியவகரிக்கும் இடத்தில் இதைப் பற்றியும் இன்னும் உலகத்தில் உதிக்கும் ஒவ்வொரு வஸ்துவின் ஆண்பெண் தோற்றங்களைப்பற்றியும் பின்வருமாறு விளக்கிக்காட்டியிருக்கிறது:—

"இன்னும், மரித்துக்கிடக்கும் இப்பூமியானது அவர்களுக்கு ஓர் அறிகுறியாயிருக்கிறது: அதற்கு நாம் உயிரைக்கொடுத்து அதிலிருந்து தானியத்தை முளைக்கச் செய்கிறோம்; அதனால் அவர்கள் அதைப் புசிக்கிறார்கள். மேலும், அதன் கனியை அவர்கள் புசிக்கும்படி பேரீச்சமரங்களையும் திராக்ஷைக் கொடிகளையும் உடைய தோட்டங்களை நாம் அங்கே உற்பத்திசெய்கிறோம்; அதை அவர்களுடைய கைகள் செய்யவில்லை; அவ்வாறாயின் அவர்கள் நன்றிபாராட்ட மாட்டார்களா? பூமியில் உற்பத்தியாகும் எல்லாவஸ்துக்களிலும் அவற்றைப்போன்ற இதரவஸ்துக்களிலும் ஆணும் பெண்ணுமாக ஜோடிஜோடியாய் அமைத்திருக்கும் அவனுக்கே எல்லாப்பெருமையும் தகும்."

கர்மசித்தாந்தம் நம்முடைய ஜவாப்தாரித்தனத்தை மழுங்கச்செய்துவிடுகிறது.

நம்முடைய இகலோகச் செய்கைகளெல்லாம் நமது மனத்திலிருந் துண்டாகும் எண்ணங்களிலிருந்து ஜனிக்கின்றன. புறச்செய்கைகளுக்கு மூலஸ்தானம் அகத்திலுதிக்கும் எண்ணங்களாகும்; அகத்தின் எண்ணங்களுக்கு மூலகாரணம் நம்முடைய மனமாகும். ஆகவே நம்முடைய செய்கைகளுக்கெல்லாம் ஆதிகாரணமாக மனமானது அமைந்திருக்கும்போது அம்மனத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஜவாப்தாரித்தனத்தைப்போக்கும்படியான கொள்கையை ஏற்றுக்கொள்வது மனிதத்தன்மைக்கே கேவலமாயிருக்கிறது. நம்முடைய செய்கைகளுக்கு நாம் ஜவாப்தாரியல்லவென்றும் அதற்கெல்லாம் ஆதிகாரணம் நம்முடைய பூர்வ ஜன்மக்கர்மம் தானென்றும் சொல்வோமாயின் நம்முடைய சன்மார்க்க உணர்ச்சியையும் மனப்பரிசுத்தத்தையும் அடியோடு ஒழிப்பதற்கு வேறு நமன் வேண்டுமோ? இக்காரணத்தால்தான் ஜன்மசித்தாந்தத்தையும் கர்மசித்தாந்தத்தையும் எமது இஸ்லாமார்க்கம் அடியோடு கண்டிக்கிறது. இஸ்லாமார்க்கப்படி அவனவன் செய்கைக்கு அவனவனே ஜவாப்தாரியாகிறான். ஹிந்துக்களின் கர்மசித்தாந்தத்தைப்போலவே கிரிஸ்தவர்களின் சித்தாந்தமும் நல்லுயிருக்கு நமனாய் அமைந்திருக்கிறது. நம்முடைய பாபங்களையெல்லாம் ஏசுநாதர் சிலுவையில் அறைபட்டு ஏற்றுக்கொண்டு போய்விட்டாரென்று நம்புகிறதாம், உடனே நமது பாபமெல்லாம் நசித்துப் போகிறதாம்! இதென்ன விபரீதம்!! இப்படிப்பட்ட சித்தாந்தத்தைக் காட்டினும் நம்முடைய ஜவாப்தாரித் தன்மையை மழுங்கச் செய்வதற்கு வேறென்ன விதிவேண்டும்? நான்செய்யும் பாபத்

தை யெல்லாம் வேறொருவர் ஏற்றுக்கொள்வதால் எனக்கு ஆண்டவன் எவ்வகைத் தண்டனையும் விதிப்பதில்லையென்று நம்புவேனாயின் நன்மைசெய்ய வேண்டுமென்னும் விருப்பமே ஒருபோதும் எனக்கில்லாமல் போய்ச் சதா தீமையையே செய்ய எனக்குத் தூண்டுதல் உண்டாகிறது. இன்னும், நமக்குண்டாகும் துன்பங்களுக்கு நாம் பரிகாரம் செய்கிறோம். ஏன் செய்கிறோம்? நம்முடைய நன்முயற்சியால் நமது துன்பத்தையும் துக்கத்தையும் போக்கிக் கொள்ளலாமென்று நம்புகிறோம்; ஆனால் நமக்குண்டாகும் துன்பத்துக்கும் துக்கத்திற்கும் காரணம் முன்ஜன்மக் கர்மம்தான் என்றும் அக்கர்மத்தின் பலனையே இப்பொழுது அநுபவிக்கிறோமென்றும் சொல்வோமாயின் நம்முடைய துன்பத்துக்கும் துக்கத்துக்கும் பரிகாரம் தேடுவதில் பயனில்லையென்று நம்முடைய மனம் சோர்வு அடைகின்றது. நம்முடைய முன்ஜன்மக் கர்மப்பயனால் இப்பிறவியில் துன்பமும் துக்கமும் பெறுகிறோம். இது தேவநீதி. இறைவனுடைய இச்சட்டத்தை எப்படி நம்மால் முறிக்க முடியும்? ஆதலின் நம்முடைய துன்பத்தையும் துக்கத்தையும் மாற்றிக்கொள்ளப்பிரயத்தனம் செய்வது வியர்த்தமேயாகும். என்னுடைய முன் ஜன்மத்தில் ஏதோ சில தீமைகளைச் செய்துவிட்டேன்; அக்கர்மத்தின் பயனால் இப்பிறவியில் நான் துன்பத்தை அநுபவித்தே தீரவேண்டும்; இக்கர்மாவின் நியதியின்படி நான் துன்பத்தையும் துக்கத்தையும் அநுபவிக்கும்போது அத்துன்பத்தையும் அத்துக்கத்தையும் மாற்றிக்கொள்ள நான் பாடுபடுவேனாயின் அந்தக் கர்மசித்தாந்தத்தின் உண்மையையே நான் மறுதளித்தவனாகிறேன். கர்ம நியதியில் எனக்கு மெய்யான நம்பிக்கை இருக்கவேண்டுமாயின் இவ்வுலகத்தில் எனக்குண்டாகும் துன்பத்

தையும் துக்கத்தையும் போக்கிக்கொள்ள நான் எவ்வகைப் பிரயத்தனமும் செய்யக்கூடாது. கர்மசித்தாந்தத்தை ஒப்புக்கொண்ட ஒருவருக்குக் காலரா வந்துவிடும்பக்ஷத்தில் அவருக்கு ஒருவித சிகிச்சையும் செய்வதுகூடாது; போன ஜன்மத்தில் அவர் செய்த தீவினையின் பயனால் இந்த ஜன்மத்தில் காலரா வந்துவிட்டது; இது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட கடுமையான சட்டம்; இதை மீறுவதற்கு மனிதருக்குச் சக்தியில்லை; ஆதலின் காலரா கண்டவுடன் அவருக்கு எவ்வகைச் சிகிச்சையும் செய்யாமல் நமனிடம் ஒப்புக்கொடுத்து விடுவதே நல்லமாதிரியாகும். கர்ம சித்தாந்தத்தை ஒப்புக்கொள்வதால் இப்படிப்பட்ட முடிவுதான் உண்டாகிறது; மனிதனுடைய முயற்சியையும் முற்போக்கையும் அடியோடு ஒழிப்பதற்கு இதைக்காட்டிலும் வேறு எமன் வேண்டுவதில்லை.

இப்பிறவியில் நமக்குண்டாகும் துக்கத்துக்கெல்லாம் உற்பத்திக்காரணம் முன்ஜன்மத் தீவினையே யென்று அவர்கள் வாதிக்கின்றனர்; அவர்களுடைய கொள்கையின்படி இவ்வுலகில் துன்பமும் துக்கமும் அடைபவர்களெல்லாரும் பழயவினையின் பாபத்தையே அடைகிறார்கள் என்று முடிவுகட்ட வேண்டும். ஆனால், இவ்வுலகம் தோன்றிய காலமுதல் நாளிதுவரையில் இதன் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர்களெல்லோரும் மற்றையோரைக் காட்டினும் மகாகொடுமையான துன்பங்களையும் துக்கங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். அம்மகான்களெல்லோரும் ஆயிரம்பாடு அரும்பாடு பட்டிராவிடின் இவ்வுலகம் இவ்வளவு முன்னேற்ற மடைந்திராதென்பது திண்ணம். இவ்வுலக முன்னேற்றத்துக்காக அநேக நபிமார்களும் (தீர்க்கதரிசிகளும்) சீர்திருத்தக்காரர்களும் தத்துவ சாஸ்திரிக

ளும் ஓயாமல் உழைத்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய துன்பத்தில் ஆயிரத்தில் ஒன்றுகூட மற்ற மனிதர்கள் அநுபவித்திருக்க மாட்டார்கள். இவ்வாறே இவ்வுலகில் ஸயன்ஸ் என்னும் சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் எவ்வளவோ சகிக்கமுடியாத துன்பங்களையெல்லாம் சகித்துக்கொண்டு அந்த ஸயன்ஸின் சூட்சியால் அநேக இயந்திரங்களை யெல்லாம் கண்டுபிடித் திருப்பதனுலல்லவோ மனிதவர்க்கத்தார் எவ்வளவோ சுகமடைந்திருக்கிறார்கள்! இப்படிப்பட்ட மகான்களெல்லாரும் பட்ட பாட்டுக்கோ அளவில்லை. அவர்களுடைய துன்பத்தில் ஆயிரத்தில் ஒன்றுகூட ஏனையோர் அடைந்ததேயில்லை; கர்மசித்தாந்தப்படி அப்படிப்பட்ட மகான்களெல்லாரும் அடைந்த துன்பங்களுக்கெல்லாம் ஆதிகாரணம் அவரவரின் முன்ஜன்மத் தீவினையல்லவா? ஆகவே அம் மகான்களெல்லாரும் முன்ஜன்மத்தில் மகாபாபிகளாக இருந்திருக்க வேண்டும். அதாவது முதல் ஜன்மத்தில் மகாபாதகங்களையெல்லாம் செய்தவர்கள் மறுஜன்மத்தில் மகாத்மாக்களாகவும் மகான்களாகவும் அவதரித்தார்கள் என்னும் முடிவுக்கு வந்து சேர்கிறோம். துக்கத்தால் சுகமுண்டாகிறது; துக்கமோ முன்ஜன்மப் பாபமாயிருக்கிறது; ஆதலின் மனித கோடிக்குச்சுகம்வேண்டுமாயின் பாபமும் இவ்வுலகில் சதா குடிகொண்டிருத்தல் வேண்டும். இஃதென்ன விபரீத முடிவாயிருக்கிறது!

இன்னும், கர்மசித்தாந்தத்தை ஒப்புக்கொள்வோமாயின் உலகசன்மார்க்கத்துக்கே உபத்திரவம் உண்டாகிறது. அதனால் மனிதன் பலவழியிலும் கெட்டுவனுகிறான். ராமன் கிருஷ்ணனை அடித்துக் காயப்படுத்திவிடுகிறான்; அதற்குக் கிருஷ்ணன் வழக்குச் செய்யும்போது ராமன்,

“முன்ஜன்மத்தில் என்னை வாதி (கிருஷ்ணன்) அடித்துத் துன்பம் செய்தான்; அதன் பிரதிப்பிரயோஜனத்தை அவன் இந்தஜன்மத்தில் என்மூல்யமாய் அனுபவிக்கிறான்,” என்று எதிர் கக்ஷி சொல்லுகிறான். கர்மசித்தாந்தத்தின் படி ராமன் தன் கக்ஷியை ஸ்திரப்படுத்துவானாயின் இவ்வுலகில் நியாயமானது எப்போக்குப் போகுமென்று நினைக்கின்றீர்கள்? வேறொருவன் வீட்டில் கன்னக்களவு செய்யும் திருடனும் இவ்வாறே கர்மசித்தாந்தத்தின்படி போன ஜன்மத்தில் தன் (திருடன்) வீட்டில் வாதி திருடினதற்குப் பதிலாகவே தான் இந்த ஜன்மத்தில் அவன் வீட்டில் திருடியதாய்ச் சொல்கிறான். கிருஷ்ணனிடத்தில் ராமன் நம்பிக்கையாகச் சில பொருளைக்கொடுத்து அமானத்து வைக்கிறான்; பிறகு ராமன் தன் பொருளைத்திரும்பக் கேட்கும் போது கிருஷ்ணன் சொல்கிறான்: “ஹே! முன்ஜன்மத்தில் என்னிடம் ராமன் கடன்பட்டிருந்தான்; அதைத் தானே இந்த ஜன்மத்தில் அவன் திருப்பிக்கொடுத்திருக்கிறான்; இதற்கென்ன வியாஜ்யம்?” கர்மசித்தாந்தத்தை வைத்துக்கொண்டு அதன் முடிவு என்னவாகிறதென்று எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து யோசிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அச்சித்தாந்தமானது இவ்வுலக முன்னேற்றத்தையும் மனிதர்களின் நன்முயற்சியையும் அவர்களுடைய சன்மார்க்க உணர்ச்சியையும் மழுங்கச்செய்வதாய்க் காணப்படுகிறது. மனிதன் தன் செய்கைக்குத் தானே ஜவாப்தாரி யென்பதை எந்த நிமிஷத்தில் மறக்கிறானோ அதே நிமிஷத்தில் இவ்வுலகமானது சீர்குலைந்து போகும். இதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

எமது சுத்த சத்திய சம்பூரணவேதமாகிய குர் ஆன் ஷரீபில் மனிதனுடைய சுகதுக்கத்துக்குரிய வியாக்கியான

மானது அவனுடைய ஜவாப்தாரித்தனத்தை வளரச் செய்யக் கூடியதாயிருப்பதனால் அவ்வகைச்சித்தாந்தமே எமக்குப்பொருத்தமாயிருக்கிறது. எமது திருமறையின் சித்தாந்தப்படி என்செய்கைகளுக்கு மட்டும் யான் ஜவாப் தாரியா யிருப்பதல்லாமல் என் சந்ததியில் பின்னால் உதிப் பவர்களின் சுகதுக்கத்துக்கும் நானே ஜவாப்தாரியாகி றேன். நம்முடைய சொந்த விஷயத்தில் நாம் செலுத்தும் கவலையைக் காட்டினும் பன்மடங்கு அதிகமான கவலையை நம்முடைய சந்ததியாரிடத்தில் செலுத்துகிறோம். குடும் பியாயில்லாமல் ஏகாங்கியாய்த்திரிபவர் சில சமயங்களில் தங்களுடைய சொந்த விஷயமட்டும் தானே பாதிக்கப் படுமென்று துணிந்து சில அடாதகாரியங்களைச் செய்து விடுகின்றனர்; ஆனால் குடும்பியாயிருப்பவர்கள் தம்முடைய சந்ததியின் நன்மையை உத்தேசித்தேனும் அப்படிப்பட்ட அகிருத்தியங்களைச்செய்வதில்லை. நான் செய்யும் தீமை களுக்கு நான் மட்டும் ஜவாப்தாரியா யிருப்பதல்லாமல் என் வம்சத்தாரும் அதனால் தீமையடையக்கூடுமாயின் நான் என் செய்கைகளில் எவ்வளவோ ஜாக்ரதையாயிருத் தல் வேண்டும். என் செய்கைகளுக்கு யான் மட்டுமே ஜவாப்தாரியா யிருப்பேனாயின் ஒவ்வோர் சமயத்தில் மனச்சடைவினாலோ அல்லது செய்து பார்ப்போமென் னும் தூண்டுதலாலோ ஒரு தீயகாரியத்தைச் செய்ய மனம் துணிந்துவிடும். குழந்தைகள் சில அங்கஹீனத்துடன் ஜனிக்கும் பக்ஷத்தில் அதற்குக் காரணம் அக்குழந்தை களின் பூர்வ ஜன்மக் கர்மமென்று சொல்வதைக் காட்டி னும் அவர்களுடைய மாதாபிதாக்கள் செய்த தீவினைதான் என்று ஒப்புக்கொள்வோமாயின் குழந்தைகளின் க்ஷேமத் தைக் கருதியேனும் பெற்றோர்கள் பரிசுத்தமா யிருப்ப

தற்கு ஒரு தூண்டுதல் உண்டாகும். ஒருவன் செய்யும் காரியத்துக்கு அவனுடைய குழந்தைகளும் துன்பத்தை அனுபவிக்கிற தில்லையென் றிருக்குமாயின் அவன் தன்னுடைய சொந்த நன்மையைமட்டும் பொருட்படுத்தாமல் ஒரு சமயம் தீயவழியிலும் அவன் இறங்கத் துணிந்துவிடுவான். ஒருவன் கட்குடியனு யிருக்கிறான்; அவன் ஏகாங்கியாயிருப்பானுயின் குடியின் தீங்கைப்பற்றி அவன் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. அவன் குடும்பியாயிருந்து தன் குடியால் தன் குடும்பத்தாரும் பின் சந்ததியாரும் தீங்கையடையும்படி நேரிடுமென்று கருதுவானுயின் அவர்களின் க்ஷேமத்தைக் கருதியேனும் அவன் தன் மதுபானத்தை நீக்கிக்கொள்ள முயற்சிசெய்கிறான். இப்படியே தங்களுடைய குடும்பத்தாரின் க்ஷேமத்தைக்கருதி அநேகம்பேர் சன்மார்க்கத்தில் ஒழுகி வருகின்றனர்.

மனிதனுடைய சுகதுக்கத்துக்குக் காரணம் இன்னதென்று எமது குர்ஆன் ஷரீபு சொல்வதையும் கர்ம சித்தாந்தக்காரர் சொல்வதையும் இப்பொழுது நன்கு தெரிந்துகொண்டீர்கள். எமது திருவேதத்தில் சொல்வதுதான் உண்மையென்றும் இல்லாவிடின் கர்மவாதிகள் சொல்வதுதான் சரியென்றும் ஒருவரும் தம்முடைய சொந்த அனுபவத்தைக்கொண்டு சாதித்தல் முடியாது. பிறக்குமுன் எங்கிருந்து வந்தோமென்றும் இறந்தபின் எங்கே போகிறோமென்றும் யாரும் தம்முடைய அனுபவத்தைக்கொண்டு ஸ்தாபித்தல் முடியாது. கர்ம சித்தாந்தைப்பற்றிய சில வேடிக்கையான கதைகளைச் சில சாமான்ய மனிதர்கள் கேட்டு ஆனந்த மடைந்தபோதிலும், தான் இதற்கு முன் ஜன்மத்தில் என்ன பிறவியிலிருந்துஎன்னசெய்தாரென்று நிதானபுத்தியுடைய ஒருவரும் சொல்லத்துணியார். கர்ம

சித்தாந்தம் சரியா அல்லது குர்ஆன் ஷரீபில் சொல்வது சரியாவென்று ஒருவரும் பிரத்தியக்ஷத்தில் ருசுப்படுத்த முடியாது. ஆனால் மனிதர்களின் சன்மார்க்கத்தைச் செம்மைப்படுத்தி இவ்வுலகத்தை முன்னேறச் செய்வதற்கு எமது திருமறையில் சொல்லப்பட்டிருப்பது மெத்த உதவி புரிகின்றது. ஹிந்துக்களின் கர்ம சித்தாந்தமானது "எல்லாம் விதிவசம்" என்று சொல்லி மனிதனுடைய முயற்சியையும் போக்கி அவனுடைய ஜவாப்தாரித் தனத்தையும் அடியோடு ஒழிக்கின்றது; இச்சித்தாந்தத்தின் மகாமோசமான விஷயம் யாதெனின், மனிதனுடைய சுகத்துக்கும் மேன்மைக்கும் பாபச் செயலானது அவசியம் வேண்டியிருக்கிறதென்று அக்கொள்கை ஒத்துக் கொள்ளுகிறது. இஃதென்ன கொள்கை!

"(சுகதுக்கம்) அல்லாஹ்த் தஆலாவிடத்திலிருந்து உண்டாகிறது."

"(ஓ, மனிதனே!) உனக்குண்டாகும் எல்லாவித சுகமும் ஆண்டவனிடத்திலிருந்து உண்டாகிறது; உனக்குண்டாகும் துரதிருஷ்டமெல்லாம் உன்னாலேயே விளைகின்றது."—(அல்குர்ஆன், 4: 78, 79)

மனிதனுடைய சுகதுக்கமெல்லாம் ஆண்டவனிடத்திலிருந்தே உண்டாகின்றன வென்றும், ஆனால் துக்கம் மட்டும் மனிதனுடைய தீச்செயலின் காரணமாய் உற்பத்தியாகிறதென்றும் இத் திருவாக்கியங்களிரண்டும் கூறுகின்றன. இவற்றால் நாம் உணர்ந்து கொள்ளும் கருத்து யாதெனின், "நமக்குண்டாகும் சுகமெல்லாம் ஆண்டவனுடைய அருளால் தான் அளிக்கப்படுகின்றது; ஆனால் நம்முடைய துக்கத்துக்கெல்லாம் முதற் காரணம் நாம் தான்; ஆயினும் அத்துக்கமானது ஆண்டவனிடத்தி லிரு

ந்தே முடிவாக நமக்குண்டாகிறது," என்பதுதான். இதற்கோர் உதாரணத்தைக் கவனிப்போம்: ஒரு திருடனுக்கு அரசன் தண்டனை விதிக்கிறான். அவனுடைய தண்டனைக்குக் காரணம் அவனது திருட்டுச் செய்கையாயிருந்தபோதிலும் அத்தண்டனையை அளிப்பவன் அரசனல்லவா? அஃதேபோல் நம்முடைய துக்கத்துக்கு முதற்காரணம் நம்முடைய செய்கைதான்; ஆனால் அத் துக்கமானது ஆண்டவனிடத்திலிருந்துதான் கடைசியில் புறப்படுகின்றது. ஆனால் மனிதனுடைய சுகம் முழுவதும் அல்லாஹுத் தஆலாவின் அருட் பிரகாசத்தால் தான் உண்டாகின்றன. ஆகவே நம்முடைய சுகதுக்கத்துக் கெல்லாம் காரணம் பூர்வஜன்மக் கர்மமன்று. ஆனால் எல்லாவற்றிற்கும் போதுமானவன் எமது அல்லாஹுத் தஆலா ஒருவன் தான்.

"இவ்வுலக சம்பந்தமான லௌகிக மாயைகளினின்றும் தப்பினவனே தாழ்ச்சியுறாமல் என்றென்றைக்கும் வெற்றியுடன் வீற்றிருப்பான்; ஆனால் இவ்வுலக மாயையில் அளவுகடந்து ஆழ்ந்தவன் அதோகதியில்தான் போய்ச் சேர்வான்"—(குர் ஆன், 91:9,10).

ஒரு வேண்டுகோள்.

அருமைச் சகோதரர்காள்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காத்தஹு. இப்பொழுது இஸ்லாத்துக்கு நேர்ந்திருக்கும் இடர்ப்பாடு இத்தன்மையதென்பது உங்களெல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. முஸ்லிம்கள் தங்கள் மார்க்கக் கல்வியிலும் தேசியக்கல்வியிலும் மிகுதியும் பின்னிடைந்திருப்பதே அவர்களின் தற்கால வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. கிலாபத்துக்கு நேரிட்டிருக்கும் குறைவு நிவர்த்தியாக வேண்டியதுடன் முஸ்லிம்களும் முன்னேறவேண்டுமாயின் தங்களுடைய மதவுணர்ச்சியிலும் மார்க்கக்கல்வியிலும் இனி அலக்ஷியமாயிருப்பது தகாது. நம்முடைய மார்க்க சம்பந்தமான விஷயங்களை மிகுதியும் இத்தென்னாட்டில் பரவச்செய்ய வேண்டியிருக்கின்றது. தென்னாட்டு முஸ்லிம்கள் மார்க்க விஷயத்தில் மிகவும் போடுபோக்காயிருந்து வருவதால் அன்னவர்கள் நன்குநோக்கும்படி "தத்துவ இஸ்லாம்" பத்திரிகையை அதிகமாய்ப் பரத்தவேண்டியதாயிருக்கின்றது. சந்தாநேயர்களுக்குமட்டுமே இச்சஞ்சிகையை அனுப்புவது போதாது. மார்க்கவிஷயத்தில் வெகு அலக்ஷியமாய்க் காலங் கழித்துவரும் நமது முஸ்லிம் சகோதரர்களுக்கும் நம்முடைய மார்க்க உண்மைகளை நன்றாக உணர விரும்பும் இதரமத நண்பர்களுக்கும் இப்பத்திரிகையை இலவசமாய் அதிகம் பரத்த வேண்டியிருக்கிறது. இன்னும், இப்பத்திரிகையை அதிக நேர்த்தியாயிருக்கும்படி செய்தல் வேண்டும். மேற்கூறிய விஷயங்களைச் செவ்வனே நடத்துவதற்கு நமது சந்தா நேயர்

கள் செய்யவேண்டியது ஒன்றுண்டு. சஞ்சிகையின் வருஷ சந்தாவை உயர்த்திவிடப் போகிறோமென்று ஒருவரும் சந்தேகிக்கவேண்டாம். இப்பொழுதிருக்கும் சந்தாவுடனே மேற்கூறியவிஷயங்களை யெல்லாம் செய்து முடிக்கவேண்டுமாயின் நீங்களெல்லாம் செய்யவேண்டியது ஒரு சிறு உதவிதான்: அதாவது நீங்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே வேறு ஒவ்வொரு சந்தா சேர்த்து அனுப்பினால் அஃதேபோதும். ஒவ்வொரு நண்பரிடம் சொல்லி இப்பத்திரிகையை ஆதரிக்கும்படி சொல்வாராயின் மேற் கூறிய நன்மைகளை யெல்லாம் செய்வதோடு இன்னும் இனிய வியாசங்களையும் எழுதி வெளியிடுதல் முடியும்.

"ஓ, ஈமான்கொண்டவர்களே! அல்லாஹுத் தஆலாவின் காரியத்தில் நீங்கள் உதவிபுரிவீர்களேல் அவன் உங்களுக்கு உதவிபுரிந்து உங்களுடைய பாதங்களையும் உறுதிப் படுத்துவான்.''

"நிச்சயமாக என் தொழுகையும் என் தியாகமும் என் உயிர் வாழ்க்கையும் என் மரணமுடிபும் எல்லாம் சர்வலோக ரக்ஷண்யனாகிய அல்லாஹுத் தஆலாவுக்காகவேயிருக்கும்; அவனுக்கு இணையாருமில்லை, இது எனக்குக்கட்டளையிடப் படுகிறது. இதனால் யான் முஸ்லிம்களுக்கெல்லாம் முதன்மை பெற்றவனாயிருக்கிறேன்' என்று சொல்வீராக." (குர்ஆன்).

ANJUMAN NUSRATHUL ISLAM
PUBLIC LIBRARY & FREE READING HALL
| | | 33 | 2. |

Printed at the Guardian Press, No. 158, B. Broadway, Madras.